
www.tamilarangam.net

# நண்பன்

மலர் 10 பிரான்சின் தமிழ் இதழ் விலை 8 F



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ☆ AJMEER Restaurant ☆

**4, AVENUE TRUDAINE**

**75009-PARIS**

Ⓜ ANVERS

TEL: 42 85 19 35

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

## அஜ்மீர் ரேஸ்டாரண்ட்

[illegible]

TEL: 42 05 67 05

Ⓜ CHATEAU-LONDON

**159, QUAI DE VALMY**

**75010-PARIS**

# ★ AJMEER RESTAURANT ★

[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# QĀSRE SHIREEN

## PATISSERIE FRAICHE ET SALON DE THE

*இந்திய ஈழ பாகிஸ்தானிய இனிப்பு
கார உணவு பலகார வகைகள் எம்மிடம்

*தரமான முறையில்

*குறைந்த விலையில்

தயாரித்து விற்கப்படுகின்றன. பிரான்சில்
உள்ள ஒரே இந்திய ஸ்வீட் ஸ்டால்
இது மட்டுமே. வாடிக்கையாளர்களுக்கு
மொத்த விநியோக விலையிலேயே தருகிறோம்
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வகைவகையான பலகாரங்களை
ருசிக்க இன்றே விஜயம் செய்க. ஓர்டர்
தருபவர்கள் 2 தினங்களுக்கு முன்பாக
கொடுக்க வேண்டும். * * * * *

172, RUE DU FAUBOURG ST. DENIS - 75010 PARIS
TEL. 42.49.19.30 Métro : GARE du NORD

SARL AMBALA

*RASSE MALAY
*MOTI CHOUR
*GOLABE JAMANE
*AMRATIE
*PATISSA
*SOHNE HALWA KARACHI etc
(GATEAUX ET BISCUITS)
*SAMOSSA
*NAMAK PARE
*MOEGRE
*DALLEENS etc

QASRE SHIREEN

www.tamilarangam.net



# விசிட்டர்

## விளையாட்டும் அரசியல் விளையாட்டும்

இந்த வாரம் இந்தியா, இஸ்ரேல் நாட்டுடன் டேவிஸ் கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இறுதி ஆட்டத்தில் விளையாடுகிறது.

அரசியல் ரீதியாக தென் ஆப்ரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் கொள்கைகளைக் கடுமையாகக் கண்டித்து வந்த இந்தியா இப்போது முதல் முறையாகத் தன் நிலையை மாற்றிக்கொண்டிருக்கிறது.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை பல ஆண்டுகளாக ஆதரித்து வரும்இந்தியா இப்போது பாலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலுடன் விளையாடுவது ஏன்?

ராஜீவ் காந்தியின் அரசில் எதுவுமே கொள்கை அடிப்படையில் நடைபெறாமல் நட்பு அடிப்படையில் நடப்பதே வழக்கமாகி விட்டது. டென்னிஸ் ஆட்டக்காரர் விஜய் அமிர்தராஜ் ராஜீவின் நண்பர்; அமெரிக்க வெளியுறவு செயலாளருக்கும் நண்பர். இஸ்ரேலிலிருந்து வெளிவரும் பல மோசமான வன்முறை சினிமாக்களைப் போல் தானும் திரைப்படங்கள் தயாரித்து இந்தியாவில் விநியோகிப்பவர்.

அமிர்தராஜின் பரிந்துரையின் பேரில் பலவருடங்களாக இருந்த கொள்கையை ராஜீவ் அரசு காற்றில் பறக்க விட்டுவிட்டது. இஸ்ரேல் நாட்டின் மோசமான நடைமுறைகள் உலகம் அறிந்ததுதான். குறிப்பாக இன்று இலங்கையில் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதற்கும், தமிழ்ப் போராளிகள் மீது நடக்கும் யுத்தத்திற்கும் பின்னணி இஸ்ரேலின் மூளை வேலை செய்கிறது. இலங்கை அரசுக்கு ஆலோசனையும் ராணுவத்துக்கு பயிற்சியும் தருவது இஸ்ரேல்தான்.

ராஜீவ்காந்திக்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் தொடர்ச்சியான சீரான கொள்கை கிடையாது என்பதை இந்நிகழ்ச்சி காட்டியிருக்கிறது.

வழக்கம்போல் இதற்கும் ஒரு கொள்கை விளக்கம் தரப்படுவதை ஏற்பதற்கில்லை. 'விளையாட்டுத்துறை,அரசியலுக்கு அப்பாற்பட்டது; அதில் நம் அரசியல் கொள்கையைத் திணிக்கக்கூடாது' என்று கூறுகிறார்கள்.

இந்த வாதம் வீண்வாதமாகும். விளையாட்டில் அரசியல் கோட்பாடு கூடாது என்றால் நாளைக்கே தொழில், வர்த்தகம், வியாபாரம், விவசாயம், கல்வி எல்லாவற்றிலும் அரசியல் கூடாது என்று ஆக்கிவிடலாம். அப்படியானால் அரசியல் எதில்தான் இருக்கலாம்? சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் மட்டுமா? அங்கே எதை விவாதிப்பது?—எல்லாத் துறையிலிருந்தும் அரசியல் பார்வையை எடுத்துவிட்ட பிறகு.

அரசியல் என்பது கேவலமானது அல்ல. அது முதலாளித்துவமானாலும் சரி கம்யூனிஸமானாலும் சரி - வாழ்க்கை பற்றிய ஒரு நெறிமுறை. கொள்கைகளை உருவாக்குவதைத்தான் அரசியல் என்கிறோம்.

இதெல்லாம் எதுவும் புரியாதவர்களை ஆட்சியில் வைத்த பிறகு எதுவும் நடக்கும். ஈழம் எரிகிறபோது இலங்கையோடு கிரிக்கெட் விளையாடியவர்கள்தானே நாம்!

**ஜன்னல்கள் இல்லாத வீடுகள்; வேலிகள் இல்லாத தோட்டங்கள்; பயிரிடப்படாத நிலங்கள்; கூரைகள் இல்லாத களஞ்சியங்கள்; நல்ல பழக்கங்கள் இல்லாத குழந்தைகள்-இதுபோன்ற நிலைமைகள் மது அருந்துவதினால் ஏற்படுகின்றன.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் வட்டம்

■வர வர நண்பன் கணிப்பு அபாரமாக இருக்கிறதே! தாட்சர் வெற்றியைத்தான் சொல்கிறேன்

குமார் Paris.

■இலக்கியத்துறை உலா தொடர்ந்து வெளியிடுங்கள்.

பாலன், Fontenay.

■திருமணப்பெண்கள் போன்ற வேற்றுமை விதிமுறைகள் அரு-மையான தேவையான கட்டுரை.

ஜெயா, Paris.

■இங்கிலாந்து மகாராணியும் மௌனியே தெரிந்தபின்பும் அதை மறைக்காமல் இருப்பரோ மங்கையர்? அயோத்தியாளன் புராணங்களோ கம்பன் இவ்வளவு மானமற்ற மடந்தைகளாகவா சித்தரிக்க வேண்டும். கம்பா என்ன உன் திறமை!

மகேந்திரன், Sevran.

■எம்.ஜி.ஆர் ஆதரவு கட்டுரைகளை போடுவதைப் போன்று எம்.ஜி.ஆர் எதிர்ப்புக் கருத்துக்களையும் போட்டு நடுநிலைமையை கடைபிடிக்கிறீர் பாராட்டுக்கள்.

ரவி Nogent S/M.

■தொடர்கதை நன்றாக செல்கிறது. ஆனால் சில இடங்களில் காலம் இல்லை. வேறு இடங்களில் தேவை இல்லாமல் கால் இரண்டு போடப்பட்டுள்ளது. [உ.ம்] ளோர்.

அஷ்ரப். Creteil.

■கம்பனை மாபெரும் புலவன் என்று நினைக்கும் எண்ணம் கம்பன் கழகம் இன்னும் எத்தனையோ புகழ்மாலை கேட்டதுண்டு இவ்வளவு கேவலமான ரகத்தில் உள்ள கம்பனை அன்று மட்டும் படம் பிடித்துக் காட்டவில்லை என்றால் இந்நேரம் அப்புலவனை கடவுளாக

■திருவரங்கக்கோயில் கட்டுரை தான் அதிசயமான சின்ன எழுத்து. அதை விடவும் சிறியதாக அச்சடித்தால் கண்ணாடிதான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



■பெரிய பகுதிதான் ஒதுக்கி
கருத்துக்களை அலசும் பகுதியின்
தேசியம் காட்டுகிறது அட இந்த
முஸ்லிம்களின் அறியாமைக்கு
எதிராக வரிவாக ஏதாவது
பணியை மேற்கொள்ளவும் முஸ்லிம்
அறிஞர்கள் போராடவேண்டும்
ஏற்றுப் போற்றுகின்றேன்

Ali. Baig 5/77.

■நண்பனின் தவறான கருத்து
கிழித்து எறிந்து வெளியிடாமல்
தவிர்க்க வேண்டும். ஆழமான
முறையில் வெளியிட வேண்டும்.

பாஷீ காசிம் Paris.

■பகைமையில் தொண்டிலானவர்
எங்களும் மகிழ்வு கொண்டேன்.
[illegible] விரும்பும் எழுத்துக்கள் நானா
சிந்தனையில் இருந்ததை நான்
கண்டுபிடித்து இருக்கிறேன். எம்மவர்
நாளுக்கு அவர் ஆற்றிய பணி
[illegible] அல்லாஹ் எங்கும் மறைக்க
முடியாது. அந்த கவிஞர் எங்கு
ஆரம்பித்து கிடைக்க [illegible]
[illegible] [illegible] வெளியிட்டீர்.

■பிரசங்கம் உலமாக்கள் சபை
என்ற பகுதி நாங்களும் கேட்கிறோம்.
பிரசங்க நம் உலமாக்களின் என்று
கேட்கும் முஸ்லிம்களும். ஏன்
பெண்களும் அதிகமாகவும் கூட உண்டு.

■காலத்திற்கு ஏற்றவாறு
உலக புதுமைகளை மார்க்க
அடிப்படையில் இருப்பதால் அது
அனுமதிக்கப்படுகிறது.

■இந்தியாவில் முஸ்லிம்கள்
கணிசமான எண்ணிக்கையில்
இருந்தும் அவர்கள் நாளுக்கு
நாள் சகிதம் இழைக்கப்படுவதை
உணர்கிறார்கள். எதிரிகளாக
கருதும் பூதர்களும் முஸ்லிம்
களை மிழைபட்ட இடங்களிலிருந்து
வெளியேறச் சொல்லலாம்.

■அதனால் 'ராம ராஜ்யம்'
என்றழைக்கப்படும் முஸ்லிம்களை
பாகிஸ்தானுக்கு 'ரைட்டுதல்'
போன்ற நிலைமைக்கு [illegible]
தள்ளிவிட இயக்கங்கள் [illegible]
புதிய சட்டமும் அனுமதிக்கப்பட்டு
வாங்கப்படும் அதன் [illegible]

www.tamilarangam.net



தமிழகத்திலும் பரவி வந்த அபாயத்தை அவ்வப்போது சிறிதளவாவது தடுத்து நிறுத்தும் வண்ணம்தான் இது போன்ற கோஷங்கள் - உங்கள் வார்த்தை பழ- கூச்சல்கள். எனக்கும் இக்கூச்சல்களில் உடன்பாடு இல்லை.

□அண்டை நாடான இலங்கையில் இது போன்ற கூச்சல்கள் கிடையாது. அங்கு முறைப்படி கண்ணியமும் ரேழயோர்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

□தமிழகத்தில் இவ்வளவுக்கும் முஸ்லிம்கள் என்ன பகுதிகளில் காவல் நிலையத்தில் அதிகாரப்படி பார்க்கின் முஸ்லிம் ஊழியர்கள் குறைவுதான். இதுவும் மாற்றுமத நண்பரின் கூற்று. அதிகமாகக்கம் தேவை இல்லை. நாத்திகம் ஒன்றும் தெரியாத பாப்பா அல்ல.

அபு அப்துல்லாஹ், Grissel.

இஸ்லாம் என்பதே சாந்தி

கூச்சல் என்று கேட்கலாம். கேள்வி நியாயம்தான். ஆனால் முன்பெல்லாம் இல்லாமல் இப்போது ஏன் என்ற கேள்வியும் வருந்தால் விடை கிடைக்கும்.

மைதீன் சவூ 6/m.

□நாத்திகம் எழுதுவதிலும் நியாயம் இருக்குதுங்க. அவர் நபிகள் நாயகத்தை புகழ்ந்து தாங்க முதலில எழுதுறாரு. ஏங்க இந்த வம்பு?

யூசுஃப், Paris.

□இந்துக்கள் அனைவருக்கும் சங்கராச்சாரியார் தான் குரு என முதலில் எண்ணியிருந்தேன். ஜீயர் சுவாமிகள் பற்றிய கட்டுரையிலிருந்து வேறு விளக்கம் அறிந்து கொள்ள முடிந்தது.

பஸ்கால், Paris

□ஜோதிர்லதா கிரிஜா'வின் கட்டுரை படைக்கு சரியான சாட்டை அடி. கௌரி, Poissy.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பிரான்ஸ் நாட்டின் பிரபல வழக்கு

★கிளாஸ் பர்பீ, 73 [Klaus Barbie] உடைய வழக்கு விசாரணை முடிவுற்றது.

★2-ம் உலகப்போரின் போது 44 யூத குழந்தைகளை சித்ரவதை கொடுக்க அனுப்பிய குற்றம் உட்பட 5 குற்றங்களுக் கான விசாரணை இது.

★இவருடைய வழக்கறிஞர் அப்துல்லாவின் வழக்கில் வாதிட்ட அதே வழக்கறிஞரே. பிரெஞ்சு நாட்டுச் சட்டப்படி சாட்சி விசா ரணையின் போது குற்றவாளி விரும்பினால் சிறைச்சாலையிலே யே இருந்து அன்றைய நில- வரத்தை சிறையில் இருந்தபடியே பெற்றுக் கொள்ளலாம்.

★அப்துல்லாவைப் போல் இவரும் நீதிமன்றத்திற்கு சாட்சி விசாரணையின் போது மே-13-ம் தேதியிலிருந்து வரவில்லை.

★3 ஜீலை அன்று வழக்கு விசாரணையின் இறுதி இவரை நியாய மன்றம் அழைத்து வர நீதிபதியால் உத்தரவிடப்பட்டார்.

★தன்னுடைய குற்றங்களை மறுத்த இவர் "அது போர்க் காலம். போர் முடிவுற்று விட்டது. நன்றி" என்று இறுதியாகக் கூறினார்.

★இவரது வக்கீல் தனது வாதத்தை முடிக்கும் போது,

★"உலகிலேயே பிரான்ஸ் தான் இது போன்ற புதுமையான சரித்திர சித்த பிரமை நாடகத்தை நடத்துகிறது" என்று கிண்டலாக முடித்தார்.

★4 பெண்களும், 5 ஆண்களும் அடங்கிய 9 பேர் கொண்ட ஜீரிகளின் குழு பர்பீ குற்றவாளியா என்பதை முடிவு செய்யும்.

★குற்றவாளி எனில் அதிக பட்சம் இவர் பெறும் தண்டனை அப்துல்லா பெற்றதைப் போன்று ஆயுள் தண்டனையாக இருக்கும்.

* *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதுவென்றும் என்ற ஜேர்மனிய அதிபரின் கருத்துக்கு 60% பி-ரெஞ்சு மக்கள் ஒப்புதல் அளித்துள்ளதாக வாக்கெடுப்பு கூறுகிறது.

*ஏற்கனவே 3 இலட்சம் பி-ரெஞ்சு இராணுவ வீரர்கள் ஜேர்மனியில் இருப்பது அறியவேண்டிய ஒன்று.



இறுதி நாள் விசாரணையில்
கிளாஸ் பார்பி, 73

*ஆஸ்திரிய அதிபர் கத்தோலிக்க மதத்தலைவர் போப்பாண் II அவர்களை சந்தித்தார். இது யூதர்களுக்கு பிடிக்காத விஷயம். காரணம் இவர் ஹிட்லர் படையில் ஒரு இராணுவ அதிகாரியாக பணிபுரிந்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. ஐக்கிய நாட்டின் பொதுச்செயலாளராகவும் இவர் இருந்திருக்கிறார். இவர்தான் கூர்த் வால்ஹைம் [Kurt Waldheim].

*நேட்டோ ஒப்பந்தத்தினை கொண்ட இராணுவத்தினை வழி நடத்தும் வண்ணம் பிரெஞ்சு, ஜேர்மனி நாடுகள் [illegible]

தமிழர்களுக்கு மருந்துப் பொருள்களை அனுப்ப மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரான்ஸ் - ஈரான் மோதல்

பிரான்ஸ் ஈரான் இடையே தூதரக உறவு முறிந்துள்ளது. முதன் முதலில் அறிவித்த பிரான்ஸ் இரண்டாம் உலகப்போருக்குப் பின் முதன் முறையாக தூதரக முறிவு செய்வது இப்போதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் சிராக் அதிபர் மித்தரானை சந்தித்த 45 நிமிடங்கள் உரையாடிய பின் இவ்வறிவிப்பு வெளியானது.

6 மணி நேரங்களில் ஈரானும் தனது அறிவிப்பை வெளியிட்டது.

லெபனானில் உள்ள பிரெஞ்சு பணயக்கைதிகள் பற்றிய பேச்சுக்கள் 3 வாரமாக தீவிரமாக இருந்து வந்தது.

பிடித்து வைத்திருக்கும் வெளியாகிய குடு ஈரானிய அதிகாரியை ஒப்படைக்க எனக் கேட்டதை.

அது இன்மை என்பது அறிவிப்பு வெளியானது

இதன் மூலம் வெளியான தகவல் உறுதிப்படுத்துகிறது. பிரெஞ்சுப் பணயக்கைதிகளில் இருவரான மர்சல் கர்தோன், 62 மர்சல் ஃபொன்டைன், 43 [Marcel Carton, Marcel Fontaine] ஆகிய இருவரும் கொல்லப்படு- வார்கள் என்று அநாமதேய அறிவிப்பு பெய்ரூட் செய்தி நிறுவனங்களுக்கு வந்தது.

இவ்விருவரும் 1985 இல் இருந்து கடத்தப்பட்டு பணயக் கைதிகளாக உள்ளனர்.

சென்ற ஆண்டு செப்டம்பர் பாரிஸ் நடைபெற்ற குண்டு சம்பவங்களும், ஐரோப்பாவில் நடைபெற்ற சில குண்டு சம்பவங்களுக்கும் சில ஈரானியர்கள் சம்பந்தப் பட்டுள்ளனர் என்று பிரான்ஸ் கருதி பாரிஸில் உள்ள ஈரான் தூதரகத்தை ஜூன் மாதத்தில் இருந்து பொலீஸ் பாதுகாப்பில் வைத்திருந்தது. அதை நீக்கும்

www.tamilarangam.net



பழ ஈரான் கேட்டுக்கொண்டது. இலங்கையில் தூதரக உறவை முறிப்பதாக ஈரான் முற்கனவே அறிவித்து இருந்தது.

ஈரானிய தூதரக அதிகாரிகளில் ஒருவரைத்தவிர மற்றவர்கள் வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

இப்ப காவலர்கள் இப் முயற்சி வெற்றால் தூதரகத்தில் உள்ள 15 ஈரானிய அதிகாரிகளின் பாதுகாப்புக்காக மேற்கொள்ள பட்டுள்ளது.

ஐந்து நாட்களில் இரு நாட்டு அதிகாரிகளும் வெளியேறிவிடுவார்கள்.

---

உதவி செய்ய முடியாத அளவுக்கு யாரும் ஏழையல்ல; உதவிதேவைப்படாத அளவுக்கு யாரும் பணக்காரனல்ல. —பின்லாந்து

நேராக இதயத்திலிருந்து வருவது நேராக இதயத்திற்குச் செல்கிறது. —ஜெர்மனி

உன் அயலான் வருகை உனக்குத் தொந்தரவாக இருக்கிறதா? அவனுக்குக் கடன்கொடு. —இத்தாலி

முதுமை எல்லா நோய்களையும் ஏற்றுக்கொள்ளும் மருத்துவமனை —ஜெர்மனி

பிரார்த்தனை செய்யும் சைத்தானே படுமோசமான சைத்தான். —போலந்து

ஒரு குமரியைப்பற்றி மோசமாகப் பேசுவதைவிட ஒரு கோயிலை எரிப்பது குறைந்த பாவம். —ரஷ்யா

தேனீயைப்போல, வஞ்சகன் வாயில தேன்; வாலில் நஞ்சு. —இத்தாலி

இலங்கைத் தமிழர்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொருள்களை கொடுத்ததற்காக, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

சென்னை ஹைகோர்ட்டு நீதிபதியாக பி.கே. சேதுராமன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மதுரை மாவட்டம் கருப்பட்டி கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு வயது 58.

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையால் இந்தியாவின் கவலையில் ரஷ்யாவும் பங்கு கொள்வதாக அதிபர் கோர்பசேவ் அறிவித்துள்ளார். விமானம் மூலம் உணவு-மருந்து ஆகியவற்றை வினியோகிக்க இந்தியா எடுத்த நடவடிக்கைகளுக்கு அவர் முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தி உடனடித் தீர்வு காண வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தித் தமிழகம் முழுவதும் ரெயில் மறியல் போராட்டத்தைத் திராவிடர் கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து நடத்தின. சென்னையில் நடந்த மறியலில் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி உட்பட 19 பேர் கலந்துகொண்டனர். அவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். மதுரையில் ரெயில் மறியல் போராட்டத்தில் ப. நெடுமாறன் கைது செய்யப்பட்டார். இம் மறியல் போராட்டத்தில் தமிழகம் எங்கும் 10,000க்கும் மேற்பட்டவர்கள் கைதாகி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ☆செக்ஸ் அரசியல்☆

☆சினிமா அரசியல் நமக்கு நன்றாகத் தெரிந்தது. சினிமா நடிகரான ரொனால்ட் ரீகன் ஜனாதிபதியாவதற்கு முன்பே தமிழகத்தில் எம்.ஜி.ஆர் முதல்வராகிவிட்டார். எனவே சினிமா அரசியலுக்கு தமிழகம் முன்னோடி.

☆சண்டை ஏற்படக்கூடிய பதட்ட நிலையில் கிரிக்கெட்டை பார்க்க காரணம் காட்டி இந்தியாவிற்கு வந்து வியக்கும்வண்ணம் சர்வசாதாரணமாக அரசியல்வாதி, பொதுமக்களிடம் பழகி ஒரு புது உணர்வை ஏற்படுத்திய ஜியாவுல் ஹக்கின் அணுகுமுறையை அரசியல் வல்லுனர்கள் கிரிக்கெட் அரசியல் என்று வர்ணித்தார்கள்.

☆பிரான்சு தொலைக்காட்சி அரசியலை நண்பன் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

☆இப்போது அனைத்தையும் விட மோசமான புது அரசியல். அதுதான் செக்ஸ் அரசியல்.

எங்கு? இத்தாலியில்? பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர்களில் சிக்சியோலினா [cicciolina] என்ற நடிகையும் ஒருவர். நடிகை என்றால் நம்பர் 1. எதில்? போர்னோ சினிமாவில் தான். போர்னோ நடிகைதானே சமத்துவவாதம் மட்டும் இங்கு இல்லையன்றி அவர் தேர்தல் பிரச்சாரத்தில் வரவில்லை.

☆உரையாற்றும் போதே மேலாடையைக் கழற்றி முழு மார்பகங்களையும் வெளியில் பார்வையாளர்களுக்குக் காட்டியபடியே பேசினாராம்.

☆இச்செயலுக்கு பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கைதட்டல். கம்பர் இல்லாமல் போய்விட்டார். எந்த மலைக்கு உவமானம் தேடலாம் என்று தவித்த பின் தங்கு தடையின்றி ஒரு உவமையத்தை - இல்லை காவி-

www.tamilarangam.net



வேடிக்கை என்னவென்றால் இதுபற்றி அங்காடி சினிமா எழுத்தாளர் ஒருவர் கூறியது தான்.

"அரசியல் மிக நாறிவிட்டது. ஒரு போர்னோ நடிகை இன்று அரசியல்வாதிகளை விட சுத்தமாக இருக்கிறாள்" என்று அவர் கூறினார்.

★★★

நேட்டோ ஒப்பந்த நாடுகளின் இராணுவ வீரர்கள் 21 இலட்சம். வார்சா உடன்படிக்கை நாடுகளுடையது 27 இலட்சம் ஆகும்.

★ சிடா [AIDS] நோய்க்காக மட்டும் அமெரிக்க அரசு சுமார் ரூ 100 கோடி ஒதுக்கியுள்ளது. இவ்வாண்டு முடிவுக்குள் மேலும் ஒதுக்கும்.

அங்கு 36,000 த்திற்கும் மேற்பட்ட சிடா நோயாளிகள். இறக்குறைய 15 இலட்சம் பேர் இருக்கலாம் என்றும் கருதப் படுகிறது.

★ ஜூலை 22ம் தேதி ராஜீவ் காந்தி மாஸ்கோ சென்று இந்தியத்திருவிழாவை [Festival of India] ஆரம்பித்து வைத்தார். இது ஒருவருடம் நீடிக்கும்.

மன்னர் கோர்ப்பசேவ் உடன் இருந்த கூட்டறிக்கையில் பெயர் சொல்லாமல் அமெரிக்காவைத் தாக்கி இருந்தனர்.

★ ஜெர்மன் அரசின் ஆயுத தாங்கி விமான நிறுவனத்தின் 5% வியாபார பங்கு பவேரியா வங்கிக்கு விற்கப்பட இருக்கிறது. இதன் மதிப்பு ரூ 100 கோடியிலிருந்து ரூ 1400 கோடி வரை ஆகும். அப்படி என்றால் மொத்த மதிப்பு இறக்குறைய ரூ 25 ஆயிரம் கோடி.

★ 8.3% வேலை இல்லா திண்டாட்டம் அதே நிலையிலேயே இருக்கிறது. குறையவில்லை. மே மாதத்தில் 20,99000 வருந்து [illegible]

www.tamilarangam.net


# இந்திய-பாக். விஞ்ஞானிகள் கொல்லப்படுகிறார்கள்...!

**வி**மல் தாஜிபாய் —

இருபத்தி நான்கே வயது நிரம்பிய இந்த இளம் இந்திய விஞ்ஞானி பிரிட்டனில் குடியேறியவர்! 'மார்க்கோனி அண்டர்வாட்டர் சிஸ்டம்ஸ்' என்ற நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்: தனது திறமையினால் வெளிநாட்டு விஞ்ஞானிகளையே மலைக்க செய்தவர் திடீரென்று — ஒரு நாள்,

விமல் தாஜிபாயின் உடல் இங்கிலாந்தின் புகழ் பெற்ற கிளிஃப்டன் பாலத்தின் கீழே கண்டெடுக்கப்பட்டது! அவர் அணிந்திருந்த பாண்ட் கால்வரை நழுவியிருக்க, அடிமுதுகின் கீழ் ஊசியால் குத்தப்பட்ட அடையாளம் ஒன்றும் காணப்பட்டது! இந்த விஷயத்தை பிரிட்டிஷ் போலிசார் அமுக்கி, விமல் தற்கொலை செய்து கொண்டதாக அறிவித்தனர்! விமலின் குடும்பத்தினரால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை!

இது நடந்து இரண்டு மாதங்களே ஆகியிருக்கும்! பாகிஸ்தானைச் சேர்ந்த ஆசாத் ஷரீப் என்ற மற்றொரு விஞ்ஞானியும்



மனக்குறை கண்டவர்கள் மனநிறைவு பெறுவதற்காகவும், கோழைகள் தைரியம் அடைவதற்காகவும், கூச்சமுடையவர்கள் நம்பிக்கை பெறுவதற்காகவும், துன்பம் உள்ளவர்கள் இன்பம் அடைவதற்காகவும், மது அருந்தி அதிலேயே அழிந்திருக்கிறார்கள்.

—ஆடம் கிளார்க்



ஆஸாத் ஷரீஃப்

மர்மமான முறையில் இறந்து கிடந்தார்! இவரும் மார்க்கோனி நிறுவனத்தில்தான் பணி புரிந்து வந்தார்! இவர் உடல் கிடந்த விதமே இவர் கொல்லப்பட்டிருக்க கூடும் என்ற சந்தேகத்தை தோற்றுவித்தது! ஒரு நீண்ட கயிறு ஒன்றை மரத்தில் பிணைத்து, அதன் மற்றொரு முனையை தன் கழுத்தில் இறுக்கி காரில் அமர்ந்து ஓட்டிச் சென்றிருக்கிறார்! இதுவும் தற்கொலையே என்று போலிசார் பூசி மெழுகி விட்டாலும், சம்பவம் நடந்த இடத்திற்கு போன ஆஸாத் ஷரீஃபின் நண்பர் ஒருவர் காரின் உள்ளே ஸ்பானர் ஒன்றை கண்டெடுத்து இருக்கிறார்! இந்த ஸ்பானரைக் கொண்டு ஷரீஃபின் கார் ஆக்ஸிலேட்டரோடு யாரோ விளையாடியிருக்கிற உண்மையும் வெளிப்பட்டது!

தனது திறமையினால் அப்போது தான் பதவி உயர்வு பெற்றிருந்தார் ஆஸாத் ஷரீஃப்! அவர் தற்கொலைக்கு காரணம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை! பாகிஸ்தானில் இருந்த தன் வருங்கால மனைவியை திருமணம் செய்து கொள்வதாக இருந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கிலாந்துககு அழைத்திருந்தார்! மண வாழ்க்கையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் தற்கொலை செய்து கொள் வானேன்?

இது நடந்து மூன்று மாதங் களுக்குள்ளாக இந்தியாவைச் சேர்ந்த மற்றொரு விஞ்ஞானி அவ்தார் சிங்-கிதா! திடீரென்று ஒரு நாள் அவ்தார் சிங் காணா மல் போனார்! அவரைப் பல நாடுகளில் சல்லடைப் போட்டு தேடி விட்டனர் போலிசார்! அவரது இளம் மனைவி தன் பங்குக்கு தனியார் துப்பறியும் நிறுவனம் ஒன்றின் மூலம் தன் கணவரை தேடி வருகிறார்! இது வரை அவர் சென்ற இடம் புதி ராகவே இருக்கிறது!

இந்த மூனறு விஞ்ஞானிகளைத் தவிர சாண்ட்ஸ் என்ற மற்றொரு பிரிட்டிஷ் விஞ்ஞானியும் கார் விபத்து ஒன்றில் உயிரிழந்தார்!

மேற்கூறிய நாலு விஞ்ஞானி களும் மார்க்கோனி நிறுவனத் தின் கம்ப்யூட்டர் பிரிவில் பணி யாற்றி இருக்கின்றனர்! இவர் கள் கொல்லப்படுவானேன்?

மார்க்கோனி அண்டர்வாட் டர் சிஸ்டம்ஸ் அமெரிக்க அரசு டன் சேர்ந்து பல புதிய போர் யுக்திகளை ஆராய்ந்து வருவது வழக்கம்! போரின் போது பயன் படுத்தக் கூடிய நவீன தள வாடங்கள் சிலவற்றை இந்த மார்க்கோனி நிறுவனம் தயா ரித்து கொடுத்தது! இந்த நாலு விஞ்ஞானிகளும் இந்த ரகசியங் களை தத்தம் நாடுகளுக்கு தெரிவித்து விடக்கூடும் என்று அஞ்சி . அவர்களை அந்த நிறு வனமே தீர்த்துக்கட்டி விட்டதாக இதர ஆசிய விஞ்ஞானிகள் கூறி வருகின்றனர்!

குறிப்பாக கொல்லப்பட்ட விமல் தாஜிபாய் அமெரிக்க அர சின் 'ஸ்டார் வார்ஸ்' திட்டங் களை செயல்படுத்துவதில் பங்கு வகித்தாராம்!

இந்த சம்பவங்கள் குறித்து இதுவரை இந்திய அரசோ, பாகிஸ்தான் அரசோ, விளக்கம் எதுவும் கேட்கவில்லை! இவர்கள் பிரிட்டிஷ் பிரஜைகள் ஆகிவிட்ட வருத்தமோ?

---

● சமரசம் உலாவும் இடமே... நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே என்று பிரபலமான தமிழ் சினிமாப்பாடல் ஒன்று உண்டு. இன்று இந்த பாடல் ஒலிக்க வேண் டிய இடம் அண்ணா தி.மு.க விற்குள் தான்!

ஜெயலலிதா அணியில் இருந்து அமைச்சர் திருநாவுக்கரசும் - வீரப் பன் அணியில் இருந்து காளிமுத்து வும் மோதிக் கொண்டது ஊரறிந்தது தான். அப்படி மோதிக்கொண்டவர் களில் ஒருவரான காளிமுத்து சில நாட்களுக்கு முன் அமைச்சர் திரு நாவுக்கரசு வீட்டிற்குச் சென்று அரை மணி நேரம் திருநாவுக்கரசிடம் பேசிக் கொண்டிருந்த

● உடல்நிலை சரியில்லாமல் இருந்த புசிறிப்புத்தன் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற் றார். புசிறிப்புத்தனை சந்தித்து உடல்நிலை குறித்து எம்.ஜி.ஆர் விசாரிக்கவே- புசிறிப்புத்தன் வழக் கம் போல் வைத்ய செலவை எம்.ஜி.ஆர் ஏற்பார் என்று நினைத்து விட்டார். மருத்துவ மனை அவருக்குக் கொடுத்த பில்லை புசிரியார் தோட்டத்துக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறார்!

தோட்டத்திலோ! புசிரியாரி டம் நிறையப்பணம் இருக்கிறது. அவரிடமே 'கலெக்‌ஷன்' செய்து [illegible] என்று கலெக்‌ஷனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஷார்ஜா, அபுதாபி, துபாய், அஜ்மான், ரஸ் கைமா, உம்மல் கைவான், ஃபுஜைரா ஆகிய 7 நாடுகளின் கூட்டமைப்புதான் "ஐக்கிய அரபு அமீரகம்" ஆகும்.

ஷார்ஜா நாட்டின் மன்னர் ஷேக் சுல்தான். இவர் விடுமுறைக்கு சென்ற போது இவரது சகோதரரான அப்துல் அஜீஸ் இராணுவ உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றினார். இவருக்கு அபுதாபி ஆதரவு. முன்னாள் மன்னருக்கு துபாய் ஆதரவு அளிக்கின்றன.

நாசாவின் விண்ணியல் வல்லுனர்கள் இருவர் நம்முடைய சூரிய சிஸ்டத்திற்கு அப்பாலும் கிரகங்கள் இருப்பதை கண்டு பிடித்துள்ளனர்.

ஒரு புதிய நட்சத்திரத்தையும் கண்டுபிடித்துள்ளனர். இதன் தொலைவு சூரியனிலிருந்து

இது ஜூபிடரை விட ஐந்து மடங்கு வரை பெரிது. ஒரு ஒளி ஆண்டு என்றால் என்ன? ஒரு வினாடிக்கு ஒளி 297600 கி.மீ. [1,86,000 மைல்] செல்லும். ஒரு வருடம் என்றால் 186,000 x 60 x 60 x 24 x 365 ஆக ஏறக்குறைய 6 டிரில்லியன் மைல்கள் ஆகும்.

கிரகங்களில் ஜூபிடர்தான் பெரியது.

இருப்பினும் இது சூரியனை விட ஆயிரத்தில் ஒரு பங்கு தான்.

துப்பறியும் நிறுவனத்தால் நாடு படும் பாடு போதாது என்றால் நடிகைகள் வேறு துப்பறியும் நிறுவனங்களைப் போய் விட்டார்கள்! தாசரி பத்மாவை மட்டம் தட்ட காங்கிரஸ் சகோதரிகள் தாயார் தாசரி பத்மா மற்றும் அவர் கணவரான தாசரியைப்பற்றி துப்பறிந்து சொல்ல ஏற்பாடு செய்துள்ளார் என்கிறார்கள். சினிமாக்காரர்களுக்கு பிரபலமாக எதுவும் அடிபடக் கூடாது! அது கதையாக இருந்தாலும் சரி, துப்பறியும் நிறுவனமாக இருந்தாலும் சரி!

www.tamilarangam.net



# பிரான்ஸ்வா லியோதா(ர்)

*Francois Leotard, 45 சிராக் அரசின் ஒரு மந்திரி. புகழ் பெற்றவர். இளைஞர். இவருடைய ஆசை உச்ச நுனியை எட்டி விட்டது.

*எனவே, அவர் வாய் வெளிப்படுத்த ஆரம்பித்தது. கூறினார், "1988 ஜனாதிபதி தேர்தலில் வலது சாரிகளின் சார்பாக ஜனாதிபதி பதவிக்கு தங்களது குழு தன்னை அல்லது ரெய்மோம்பாரை [Raymond Barre] தேர்வு செய்யும் என்று. தன்னுடைய தலைவரான சிராக்கையே புறக்கணித்து பேசிய பேச்சு இது.

*இதுவரை சிராக், தான் ஜனாதிபதி போட்டிக்கு நிற்கப்போவதை கூற ஆரம்பிக்கவில்லை. ஆனால் அவர் நிற்பார் என்பதை அரசியலில் ஆனா, ஆவன்னா படிப்பவர் கூட கருத்துரைப்பார்.

*பிரெஞ்சு மக்கள் பொதுவாக கிழத்தான் தேர்வு செய்வர். ஏனென்றால் அவர்கள்தான் அநுபவத்தில் முதிர்ந்தவர்கள். அரசியல் தெரிந்தவர்கள் என்ற அடிப்படையில். இதுவும் ஆனா, ஆவன்னாக்காரர்க்கு தெரியும். லியோதாருக்கும் புரியும்.

*அப்படியிருக்க லியோதாருக்கு எப்படி தீரம் வந்தது?

*வாக்கெடுப்புகளில் இவர்தான் சிராக் மந்திரி சபையிலேயே புகழ் பெற்ற மந்திரியாக விளங்குகிறார். இது ஒரு முக்கிய காரணம்.

*இருப்பினும் மந்திரிக்கான பொறுப்பில் இவரது அநுபவம் போதிய அளவு இல்லை என்று அதே வாக்கெடுப்பு கூறுகிறது.

*அதை சமாளிக்கும் வண்ணம் லியோ,

*"நானே பண்ணாத செய்வது" கொள்கை முடிவுகளை எடுக்க பிரதமர் சிராக் எண்ணினால் யவைதலில்

www.tamilarangam.net



சிராக் அடக்கி வைத்திருப்பதை எடுத்துரைக்கிறார்.

★இவர் கருத்தை வர்த்தக தொழிலமைச்சர்களான மிசெல் நுவா(ர்) 43, மிசெல் பர்சக் 42 [Michel Noir/Michèle Barzach] ஆகிய இருவரும் ஆமோதித்துள்ளனர்.

★தனது கருத்தை அதாவது அதிபர் தேர்வுக்கான கருத்தை அதாவது "தான் அல்லது பார் [Barre] தான் என்ற கருத்தை லியோ சொன்னவுடன் சிராக் இவரை அழைத்துப் பேசினார்.

★கால்மணி நேரப் பேச்சில் பிரதமர் இவரை நன்கு வாங்கி விட்டார்.

★இரண்டில் ஒன்று ஒன்று வாய்மூடி அமைச்சரவையில் இரு. அல்லது இராஜினாமா கொடுத்துவிட்டு பேசாமல் சொந்தக் கட்சியை கவனிக்க போய்விடு.

★சிராக்கிற்கு அதிபர் பதவியில் கண் இல்லை என்றால் இப்படி பேச்சே அவசியம் இல்லை. அல்லது அமைதியான முறையில் கண்டித்து இருக்கலாம்.

★ஆனால் சிராக் நினைத்தது வேறு. இப்படிச் சொன்னால் இப்பொடியன் அடங்கிவிடுவான் என்று. ஆனால் பொடியன் புலியாவதுண்டு என்பதை சிராக் அறியவில்லை.

★லியோ 'குடியரசு கட்சி' [Parti Republician]யின் தலைவர். இது போன்ற சிறு கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துதான் UDF கட்சி உருவானது. அந்த UDF கட்சியும் சிராக்கின் கட்சியும் சேர்ந்துதான் இன்று பிரெஞ்சு அமைச்சரவை. எனவே அன்றைக்காய் கட்சித்தலைவரான லியோ என்ன செய்து விட முடியும் என்று தான் சிராக் துணிவுடன் கடிந்து கொண்டார்.

★ஆனால் லியோ சிராக் எதிர்பாராத வண்ணம் தனது சின்ன கட்சியை சேர்ந்த 8 மந்திரிகள் உடன் அமைச்சரவையை விட்டு

www.tamilarangam.net



வெளியேறி விடுவாரோ என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

★பதறிய சிராக் கட்டுக் கோப்பு சிதறாமல் இருக்க லியோ விடம் 1/4 மணி நேரம் தொலைபேசி யில் பேசி சமாதானப்படுத்த லியோ தான் அமைச்சரவையில் நீடிப்பதாக அறிவித்து விட்டார்.

★பரவாயில்லையப்பா. நீ அமைச்சரவையில் இரு. உனது கருத்துக்களை சுதந்திரமாகச் சொல்லிக்கொள் என்று சிராக்கும் அனுமதி கொடுத்து விட்டார்.

★லியோ வெளியேறினாலும் வெளியேறிவிட்டாலும் இந்நடவடிக்-கைகளினால் வலதுசாரிகளிடையே உள்ள கட்டுக்கோப்பு தளர்ந்து விட்டது என்பதை துணிந்து சொல்லலாம்.

★அது மட்டுமா?

மற்றொரு புறம் ஜொஸ்பெனின் உடன் வேறு முடிவின் முடிவின்.

★அரசியல் அவதானிகள் அதிபர் மித்திரன் ஜனாதிபதி தேர்தலுக்கு உத்தரவிட்டால் நிச்சயம் இடதுசாரியே மீண்டும் வெற்றி பெற வாய்ப்பு ஏற்படும்.

★" 2 ஆண்டுகளாக பெரும் புகழும் இழந்திருந்த இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சரின் புகழ் 3 மாதங்களுக்கு முன்பு எதிர்பாரா வகையில் உயர்ந்தபோது அச் சந்தர்ப்பத்தை உடனடியாக பயன் படுத்தி அவர் ஒரு ஆண்டு முன் பாகவே மறு தேர்தல் ஏற்படுத்தி வெற்றியும் பெற்றார்.

★இன்றைய மித்ரெங்கின் நிலைமையும் அதுதான். மித்திரன் ஒரு ஆண்டு முன்பாகவே - இவ் வாண்டே அதிபர் தேர்தலுக்கு உத்தரவிட்டால் அவர் அல்லது அவரது கட்சி வெற்றி பெற கணிசமான வாய்ப்புண்டு.

★' இது நண்பனின் கணிப்பு ".

www.tamilarangam.net



# கலைஞர்

## கவிஞர் கொங்குநாடன்

நாலடியாரே - இவரது
அடி உயரம்!

குறள் போல இவரது
குரல் திண்மை!
சிலப்பதிகாரம் இவர் தொட்டால்
சிவப்பதிகாரமே!

மணியும் மேகலையும்
இவரது பேனா
மைத்துளிகளே!

சிந்தும் சொற்களில்
சிந்தாக்கருத்து
சிந்தாமணியே!

வாதத்தில் பிறரது
புறமுதுகு காணுவது
இவரது புறநானூறு!

தோல்வி தொடர்ந்தாலும்
துவளாது இருப்பதே
இவரது அகநானூறு!

எழுத நினைப்போர்
இரவில் இவரது
ஏடு எடுத்துப்
படித்துப் பின்னர்
எழுதத் தொடங்கினால்
தமிழ்ப் பொதிகைக்
காற்றெடுத்து...
தித்திக்கும் கரும்புச்
சாறெடுத்து...

ஊற்றெடுத்து வரும்
ஒன்பதாயிரம் கருத்தே!

பிற மாதாக்கள்
கருவுற்ற போது
சாம்பலையே தின்றார்
சாம்பல் தமிழர்
பிறந்தார்!

மாங்காய் தின்றார் பலர்!
மாங்காய்த் தமிழர் பிறந்தார்!

கண்டதைத் தின்றார் சிலர்!
கண்ட கண்ட தமிழர் பிறந்தார்!

இவரது அன்னை
சாம்பலை ஊதிக்
கனலையே தின்றார்...

கனலாய்ப் பிறந்தார்
கலைஞர்!

கனலாய் வாழ்கிறார்!
நெருங்கும் பொருளிலும்
கனலை ஏற்றுகிறார் - தமிழ்க்
கனலை ஏற்றுகிறார்!

கனலே - அனலே
தமிழ்த் தணலே வாழ்க!

www.tamilarangam.net



# "மௌனப் புரட்சியாளர்" ராமச்சந்திரன்!

முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் இருந்த இலாக்காக்களில் பெரும் பாலானவை உணவு அமைச்சர் பண்ருட்டி ர்ாமச்சந்திரனிடம்கொடுக்கப் பட்டுள்ளது.

எம்.ஜி.ஆரின் 'சுமைகளை' இனி பண்ருட்டியார் தாங்குவார் என்று இந்த மாற்றத்தை வர்ணிக்கிறார்கள்.

எம்.ஜி.ஆரின் 'சுமைகளை' பண்ருட்டியின் தோள்களில் இறக்கி வைத்த பெருமை மத்திய அரசிற்கு உரியது. எம்.ஜி.ஆரின் துணையாக டெல்லிக்குப் போய் வந்து, போய் வந்து டெல்லியின் முழு கருணா கடாட்சத்திற்கும் உரியவராகி விட்டார் பண்ருட்டியார்!

G.O. போட்டு இலாகா மாற்றம் செய்தால் பல பிரச்சனைகள் உருவாகும். பிரச்சனையே இல்லாமல் பண்ருட்டியார் 'தற்காலிக முதல்வராக' தோற்றம் தரும் வகையில் சுமைகள் பங்கீடு நடந்திருக்கிறது.

இப்படி மறைமுகமாக பண்ருட்டியாரை ஏற்றுக் கொள்ள வைத்து விட்டால் நாளை அதிகார பூர்வமாக அறிவிப்பு வரும் பொழுது பெரிதாக எதிர்க்க மாட்டார்கள் என்ற காங்கிரசின் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு விட்டது



பண்ருட்டியார் 'சுத்தியின்றி ரத்தமின்றி அண்ணா தி.மு.க. கொள்கையில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்க காரணமாக இருக்கப் போகின்றார்' என்று எழுதினோம்.

பண்ருட்டியாரின் அரசியல்

எம்.ஜி.ஆர்-கருணாநிதி இருவரின் உறவையும் பகையையும் வைத்து தனக்குச் சாதகமான அரசியல் கொள்கையை வளர்த்து அதற்கென்று ஒரு நிலையான இடத்தையும் உருவாக்கிக் கொண்டவர், இரு கழகங்களுக்குள் யாராவது உண்டென்றால் பண்ருட்டியாரிடம் மட்டுமே அந்தப் பெருமை சென்றடையும்.

நெடுஞ்செழியனையும் அன்பழகனையும் கழகங்களுக்கு மாணவர்களாக தந்த அண்ணாமலை சர்வகலாசாலையே பண்ருட்டியாரையும் மாணவனாக உருவாக்கியது.

சிறிய வயதிலேயே தாயை இழந்த பண்ருட்டியாரின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு அவரை இன்ஜினியராக உருவாக்கியவர் அவரது பெரிய தந்தையார்.

பண்ருட்டியாரின் அரசியல் வளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவரோ அவரது மாமனார் சுப்பிரமணியம்! தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பிரபலமான தி.க. காரர். தலையில் ஜவுளியை வைத்து வியாபாரத்தைத் தொடங்கி தொழிலும் வளர்ந்த சுப்பிரமண்யம், சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள 'பாக்தாத் ஸ்டோர்' என்ற கடையின் பங்குதாரராக மாறிய பொழுது மகளுக்குத் திருமணத்தை முடித்து விட நினைத்து பையன் தேடிய பொழுது-

தி.க.காரர் சுப்பிரமண்யத்திடம் பண்ருட்டியாரைப் பற்றிக் கூறி 'உங்கள் மாப்பிள்ளையாக' வர தகுதி படைத்த இளைஞன் இன்ஜினியர் என்று சொல்லி பண்ருட்டியாரை தி.க.காரர் சுப்பிரமண்யத்தின் 'மாப்பிள்ளையாக' மாற்றியதில் மறைந்த மதியழகனுக்குப் பெரும் பங்கு உண்டு.

மருமகனை அரசியல் வாதியாக ஆக்க வேண்டும் என்று மாமனார் சுப்பிரமண்யம் ஆசைப்பட, M.L.A. சீட்டும் பண்ருட்டியாருக்கு தி.மு.க.வில் கிடைத்தது!

தி.மு.க. அரசியலுக்குள் இளைஞனாக, பட்டதாரியாக, பண்ருட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


செல்வாக்கோடு மறைந்த தி.மு.க அமைச்சர் கோவிந்தசாமி இருந்தார்!

கோவிந்தசாமியை "பிடிக்காத" தி.மு.க தலைவர்களும் அன்று தி.மு.க வில் உண்டு. கோவிந்தசாமியை பிடிக்காதவர்களாகத் தேடிப் பிடித்து 'சிநேகிதம்' செய்து கொண்டார் பண்ருட்டியார்.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஜாதி செல்வாக்கோடு இருந்த கோவிந்தசாமியை எதிர்த்த தி.மு.க தலைவர்களுக்கு ஜாதி தடையாக இருந்த போது - அவர்கள் கண்களுக்கு 'பண்ருட்டியாரின்' தோற்றம், படிப்பு, அடக்கம், மௌனமாக இருப்பது போன்ற தகுதிகளுடன் கோவிந்தசாமியை எதிர்க்கும் ஜாதி செல்வாக்கும், பின்னணியும் தெரிய வரவே -

தென்னாற்காடு மாவட்ட தி.மு.க அரசியலில் கோவிந்தசாமியை வீழ்த்த பண்ருட்டியாரை பயன்படுத்தத் தொடங்கினார்கள். இப்படி ஒரு கட்டம் வரும் என்பதை ஊகித்தே பண்ருட்டியார் ஆரம்பத்திலேயே கோவிந்தசாமிக்கு எதிரான தி.மு.க தலைவர்களிடம் தனது நெருக்கத்தை வைத்துக் கொண்டார். எனவே முதல் வெற்றி பண்ருட்டியாருக்கு கிடைத்தது. தி.மு.க வின் முதல் தோல்வி ஆரம்பமானது இப்படித் தான்!

தி.மு.க வின் பெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த கோவிந்தசாமி, சாகும் பொழுது அண்ணாவின் கையைப்பிடித்து அழுது கொண்டே 'அண்ணா,ராமச்சந்திரன்களிடம்மட்டும் பொறுப்புக்களை ஒப்படைத்து விடாதீர்கள்' என்று எச்சரிக்கும் அளவு கடைசிக் காலத்தில் கோவிந்தசாமி பண்ருட்டியாரின் மௌனத் தாக்குதலால் கலங்கிப் போய் இருந்தார்.!

கோவிந்தசாமி மறைவிற்குப் பிறகு தென்னாற்காடு மாவட்ட தி.மு.க அரசியல், ஜாதிய பின்னணியில் பண்ருட்டி ராமச்சந்திரன் தவிர்க்கப்பட முடியாத நபராக தி.மு.க.விற்குள் காலூன்றி விட்டார்!

அரசியல் சாதுர்யமிக்க கலைஞரே பண்ருட்டியாரை கணிக்கத் தவறும் அளவு பண்ருட்டியாரின் மௌனம் பிரபலமானது.

M.L.A.வாக ஆகி விட்ட பண்ருட்டிராமச்சந்திரன் தினமும் கோபாலபுரத்தில் உள்ள முதல்வர் கலைஞரைப் பார்க்கப் போவார்.

கூட்டம் கூட்டமாக கட்சிக் காரர்கள் M.L.A.க்கள் என்று கலைஞரிடம் வந்து அவரைப் பார்த்து, சிபாரிசு, உதவி, என்று கேட்டு

உதவி பெறும் அந்த நேரத்தில்-

பண்ருட்டி MLAவான எஸ்.ராமச்சந்திரன் மட்டும் கருணாநிதி எதிரில் வணக்கம் கூறி மௌனமாக நின்று விட்டு திரும்பி போய் விடுவதை வழக்கமாக மேற்கொள்ளவே-

பண்ருட்டியாரின் தோற்றம், வயது, மௌனம், MESல் அதிகாரியாக இருந்து அரசியலுக்கு வந்த விபரம் அனைத்தும் ஞாபகத்துக்கு வரவே -

அதிகாரியாக இருந்து அரசியலுக்கு வந்த பண்ருட்டியாரிடம் அதிகாரிகள் புத்தியும் இருக்கும், அடக்கமாக சொன்னதை மட்டும் செய்வார்(!) தென்னாற்காடு மாவட்டத்திற்கும் ஒரு மந்திரி கொடுத்த மாதிரி இருக்கும் என்று நினைக்க வேண்டி வந்துவிட்டது.

கருணாநிதி கவனிக்கத் தொடங்கி விட்டார் என்றவுடனேயே அவரை 'கவர ' தொடங்கிவிட்டார் பண்ருட்டியார். விளைவு? தி.மு.க. வின் இரண்டாவது தோல்வி நடந்தது. தி.மு.க மந்திரி சபையில் கட்சி வளர்ச்சிக்கு தங்க சுரங்கமாக உதவும் போக்குவரத்துத் துறையையே கலைஞரிடம் இருந்து பெற்று விட்டார் பண்ருட்டியார்!

தி.மு.க.வில் சேர்ந்த நாளாகவே, உ.கணபதிராமசுப்பையா, எஸ்.டி.எஸ் போன்றவர்களிடம் இருந்து "கருணாநிதி எதிர்ப்பாளராக'வே வளர்ந்த பண்ருட்டியார் கருணாநிதி மந்திரி சபையில் மந்திரி ஆவது என்பது வியக்கத்தக்க விஷயம். பண்ருட்டியாரின் பின்னணி தெரிந்த கலைஞரே பண்ருட்டியாரிடம் 'மசிந்து' விட்டார் என்றால் அவரின் மௌனம் எவ்வளவு புகழ் பெற்றதாக இருக்க வேண்டும்!

www.tamilarangam.net



பண்ருட்டியார் தனது அரசியல் வளர்ச்சிக்கு ஆரம்பம் முதல் பத்திரிக்கைகளையும், தொழிலாளர்களையுமே தேர்ந்தெடுத்து நாசூக்காகப் பயன்படுத்தி வந்தார்.

தி.மு.க.வில் தொழிற்சங்கத் தலைவராக இருந்த காட்டூர் கோபாலைப் பிடிக்காதவர்கள் அணியை பண்ருட்டியார் தன் பக்கம் இழுத்துக் கொண்டு, முதன் முதலாக தொழிற் சங்க இயக்கத்திற்குள் நுழைந்தார்.

நுழைந்த இடம் அசோக் லைலண்ட்? அங்கு அசோக் லைலாண்ட் தொழிலாளர்களிடம் திரட்டபட்ட நிதியைக் கொண்டு-

ராமசந்திரன் டிரேட் யூனியன் ட்ரஸ்ட் என்று தொடங்கினார்! ட்ரஸ்ட்டில் பண்ருட்டியாரின் MES நண்பர்கள் டைரக்டர்கள் ஆனார்கள். பண்ருட்டியாரிடம் நீண்ட நாட்கள் PA வாக இருந்த மோகன்தாசும் இருந்தார். இந்த ட்ரஸ்ட்டிற்காக பத்திரிகை ஒன்று தொடங்கப்பட்டது. அந்த பத்திரிகையின் பெயர் 'உரிமை வேட்கை' பண்ருட்டியார் தனது அரசியல் வளர்ச்சிக்காக தொடங்கப்பட்ட பத்திரிகை இது தான்!

அந்தப் பத்திரிகையை அறிவுபூர்வமான இதழாக, சமுக்-அரசியல் ஆராய்ச்சி இதழாகக் கொண்டு வர பண்ருட்டியார் நினைத்த பொழுது-

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அருகில் உள்ள செவ்வாத்தூர் புதூர் கிராமத்தை சேர்ந்த ப. கிருஷ்ணன் என்ற இடது சாரி கருத்துடைய பட்டதாரி மாணவர் ஒருவரை பண்ருட்டியாரிடம் அவரது நணபர் ஒருவர் அறிமுகப்படுத்தவே -

அவரை பொறுப்பாசிரியராக வைத்து உரிமைவேட்கையைவெளியிடத் தொடங்கினார்! ப.கிருஷ்ணன் 'செம்பியன்' என்ற புனைப் பெயரில் சமூக-அரசியல் ஆராயச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

74 ம் ஆண்டு பண்ருட்டியாரின் உரிமை வேட்கையில் கச்சத்தீவு பற்றிய கட்டுரை வெளிவந்தது. செம்பியன் என்ற புனைப் பெயரில் கச்சத்தீவு இந்தியாவிற்கே உரியது என்று ஆதாரத்துடன் செம்பியானால் எழுதப்பட்ட அந்தக் கட்டுரை மிகுந்த பரபரப்பை உருவாக்கியது.

தினமணிக்கதிரில் சாவி பண்ருட்டியாரைப் பற்றி எழுதும் பொழுது செம்பியன் என்ற பெயரில் பண்ருட்டியார் தான் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதுகின்றார் என்றுகூட எழுதி விட்டார்!

கருணாநிதி அமைச்சரவை கச்சத்தீவு பற்றி விவாதிக்கும் பொழுது செம்பியன் என்ற பெயரில் பண்ருட்டியார் தான் உரிமை வேட்கையில் கச்சத்தீவு பற்றி எழுதுகிறார் என்று நினைத்து கருணாநிதி பண்ருட்டியாரிடம் விசாரிக்க,பண்ருட்டியார் தனது பொறுப்பாசிரியர் தான் செம்பியன் என்று சொல்லவே —

கலைஞர், வழக்கம்போல் பத்திரிக்கையாளர்கள் பலம் தன் அணியில் வேறு யாருக்கும் இருக்கக் கூடாது என்று செம்பியனை, அழைத்துப் பேசி தன்னுடன் வைத்துக் கொண்டு விட்டார்!

பண்ருட்டியார் 'உரிமை வேட்கையை' 76ம் ஆண்டில் நிறுத்தி விட்டு நாளிதழ்கள் கவனத்தைக் கவரத் தொடங்கினார். அந்த நேரத்தில் துவங்கப்பட்ட 'மக்கள் குரல்' நாளிதழுக்காக, போக்குவரத்துத் துறை செல்வாக்கை உபயோகித்து 'ஷேர்கள்' வாங்கிக் கொடுத்து அந்த நிறுவனத்திற்குள் மறைமுகமாக காலை ஊன்றிக் கொண்டு விட்டார். தொழிலாளர்கள் பத்திரிக்கையாகத் தொடங்கிய 'மக்கள் குரல்' கம்யூனிஸ்ட்டுக்களை கைகழுவி விட்டு, பண்ருட்டியாருக்குச் சாதகமாக தி.மு.க. எதிர்ப்பு நாளிதழாக உருவாகி விட்டது. இ்வும் மௌனமாக, பண்ருட்டியாருக்கு நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லாததுபோல் நடந்தது!

எம்.ஜி.ஆர். 72ல் அண்ணா தி.மு.க.வைத் தொடங்கிய பொழுது, எம்.ஜி.ஆருக்கு தி.மு.க.விற்குள் இருந்து தகவல் தர நம்பிக்கையான மந்திரி ஒருவர் தேவைப்பட்டார். எம்.ஜி.ஆருக்கு அன்று தி.மு.க.விற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக மந்திரி சபையில் இருந்து கொண்டே பண்ருட்டியார் தென்னாற்காடு மாவட்டத்தில் ராமசாமி படையாட்சி மூலமாக வெளியே தி.மு.க. விற்கு எதிராக போர்க் கொடி தூக்க வைத்துவிட்டார். சென்னை அண்ணாசாலை காஸ்மா பாலிடன் ஹோட்டலில் இருந்து கொண்டே பண்ருட்டியாரின் உதவியோடு ராமசாமி படையாட்சி. தி.மு.க. எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டிருந்தார்!

கலைஞருக்கு இந்த விஷயம் தெரிந்தாலும் நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை. பண்ருட்டியார் மீது நடவடிக்கை எடுத்தால் அ.தி.மு.க. மேலும் வலுப்படும். தென்னாற்காடு மாவட்ட எதிர்ப்பு மேலும் பல மாவட்டங்களில் எதிரொலிக்கும் என்ற சூழ்நிலையை பண்ருட்டியார் உருவாக்கி வைத்து விட்டிருந்த நேரம் அது!

இந்தச் சூழ்நிலையில் பண்ருட்டியார் தி.மு.க. மந்திரி சபைக்குள் இருந்து கொடுத்த தகவல்கள் எம்.ஜி.ஆர். மூலமாக டெல்லி சென்று சர்க்காரியா கமிஷன் உருவாக காரணமாகி விட்டது. ஊழல் குற்றச் சாட்டுக்கள் சேலத்தில் உருவாகின.

76ல் தி.மு.க. மந்திரி சபை கலைக்கப்பட்டு ஐநூறுக்கும் அதிகமான தி.மு.க. முன்னணித் தலைவர்கள் மிசா கைதிகளாக சென்னைச் சிறையில் இருந்தபொழுது, இந்திரா காந்தி தி.மு.க. தலைமை கருணாநிதியிடம் இருக்கக் கூடாது இருந்தால் காங்கிரசை வளர விடமாட்டார் என்று நினைத்து தி.மு.க.விற்குள் கருணாநிதிக்கு எதிராக தலைமையை எதிர்த்துப் போர்க்கொடித் தூக்க யார் உபயோகப்படுவார் என்று விசாரித்தார். 76ல் இந்திரா காந்திக்கும் கிடைத்தவர், பண்ருட்டியார் தான். பண்ருட்டியார் அன்றுதான் டெல்லி காங்கிரசில் 'ஞானஸ்நானம்' ஆனார்

டெல்லியில் இருந்து சென்னை திரும்பியவர் தி.மு.க. தலைமை மாற வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை வெளியிடும் பொழுது அவருக்கு உறுதுணையாக இருந்தவர் பண்ருட்டியாரின் குருவான எஸ்.டி.எஸ். தான்! தேவர், வன்னியர் கூட்டணி அறிக்கை அது!

தேவர் - வன்னியர் செல்வாக்கு தி.மு.க.விற்கு செல்லாது என்று அறிக்கைக்கு பிறகு தெரிந்தவுடன் அண்ணா தி.மு.க. விற்குள் பண்ருட்டி ராமச்சந்திரனும், எஸ்.டி.எஸ் சும் நுழைந்துவிட்டார்கள்! தி.மு.க.விற்கு கிடைத்த மூன்றாவது பெரிய தோல்வி இவர்கள் எம்.ஜி. ஆருடன் இணைந்த பிறகே ஏற்பட்டது! தி.மு.க.வை பிளக்க வேண்டும், காங்கிரஸ் ஆதரவு பிரிவு ஒன்று தமிழகத்தில் நிரந்தரமாக இருக்க வேண்டும். அந்த நிரந்தரப் பிரிவு என்றாவது ஒருநாள் திராவிடப் பாரம்பரியத்தை தேசிய பாரம்பர்யமாக்கும் என்ற தொலை நோக்குத் திட்டத்துடன் இந்திராவால் 77ல் அண்ணா தி.மு.க.விற்குள் அனுப்பி வைக்கப்பட்டவர்தான் பண்ருட்டியார்!

அ.தி.மு.விற்குள்ளும் பண்ருட்டியார் ஆரம்பம் முதலே மௌனப் புரட்சியே நடத்தி வந்திருக்கிறார். என்றாவது ஒருநாள் அண்ணாவும், கலைஞரும், எம்.ஜி.ஆரும் அமர்ந்த ஆசனம் காங்கிரஸ் உதவியால் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பண்ருட்டியார் செய்த அரசியல் சாகசங்கள் ஏராளம்! இதனால் அவருக்கு ஏற்பட்ட இழப்புக்கள், அவமானம், போன்றவைகளை மௌனம் என்ற ஆயுதத்தை வைத்து சமாளித்தே வந்திருக்கிறார். இந்த சாதுரிம் தமிழக தலைவர்கள் கடைபிடிக்க தவறியதனால் தான் பல இழப்புக்களே உருவானது!

அரசியலில் மௌனம் என்பது ஆபத்தானது. ஆனால், பேசியே வளர்ந்த திராவிட பாரம்பரியத்தினர் பண்ருட்டியாரின் மௌனத்தை கடைசி வரை புரிந்துகொள்ளவே இல்லை.

பண்ருட்டியார் மட்டும் எந்த விஷயத்திலும் மௌனமாகவே இருக்கிறாரே ஏன்? என்று கூட கலைஞர் முதல் ஆர்.எம்.வீ. வரை சந்தேகப்படாததனால் தான் இன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்காலிக முதல்வர் அந்தஸ்து வரை பண்ருட்டியாரால் வள்ர முடிந்தது!

தி.மு.க.விற்குள் எப்படி கோவிந்தசாமி எதிர்ப்பு அணியை ஆதரித்து வளர்ந்தாரோ அதைப்போல் அ.தி.மு.க.வில் தனது வளர்ச்சியை யார் வரவேற்பார்கள் யார் தடுப்பார்கள் என்று பண்ருட்டியார் கவனித்தார்.

பண்ருட்டியாரின் கண்ணில் அ.தி.மு.க.விற்குள் முதலில் பட்டவர் அவரின் குரு எஸ்.டி.எஸ். அடுத்தது ஆர்.எம்.வி. மூன்றாவது ஜெயலலிதா. எதிர்ப்பாளர்களாக ஆர்.எம்.வி. எஸ்.டி.எஸ்.! ஆதரவாளர் ஜெயலலிதா எனக்கணக்கிட்டார்.

அரசியல் பின்னணி ஜாதிய பலம் நிறைந்த எஸ்.டி.எஸ்.சை (குருவையே முதல் குறியாக கொண்டவர் பண்ருட்டியார்!) அ.தி.மு.க.வில் இருந்து அகற்ற பண்ருட்டியார் நினைத்த பொழுதும் மௌனமாக இருந்தார். உறுமீன் வரும் அளவு காத்திருக்கும் கொக்குப் போல் மௌனமாக இருந்தவரை நோக்கி —

அண்ணா தி.மு.க. கட்சிக்குள் 'மீனாக' புயலாக நுழைந்தார் ஜெயலலிதா! ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். கட்சிக்குள் கொண்டு வருவதை அரசியல் ரீதியாக எஸ்.டி.எஸ்சும், ஆர்.எம்.வீயும் எதிர்க்கத் தொடங்கவே தனக்குச் சாதகமாக அதைப் பயன்படுத்திக் கொண்டு விட்டார் பண்ருட்டியார்!

ஜெயலலிதா - எஸ்.டி.எஸ். மோதல் முற்றியபொழுது, தி.மு.க.வை அழித்த பாணியை எஸ்.டி.எஸ்.சுக்கு நினைவூட்டி ஜெயலலிதாவை அழிக்க வேண்டும் என்றால் எம்.ஜி.ஆர். மீது ஊழல் குற்றச்சாட்டு வைக்கச் சொல்லவே — மொத்த அண்ணா தி.மு.க.வும் எஸ்.டி.எஸ்.சுக்கு எதிராக திரும்பி விட்டது! எஸ்.டி.எஸ். எம்.ஜி.ஆரை நோக்கி ஊழல் பேர்வழி என்றார்.

விளைவு, எஸ்.டி.எஸ். அ.தி.மு.க. தொண்டர்கள் ஆதரவோடு அகற்றப் பட்டு விட்டார்!

அடுத்தது ஆர்.எம்.வி! ஆர்.எம்.வீயை எப்படி ஒதுக்குவது? அதற்கும் சாதகமான ஒரு நேரம் எதிர்பார்த்

கிடைத்தது. 84ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பொழுது ஆர்.எம்.வியால் பாதிக்கப்பட்டு ஜெயலலிதா வேதனையாக தனியாக இருந்த பொழுது, பண்ருட்டியார் அ.தி.மு.க.விற்குள் நடுநிலை வகித்து தனது அனுதாபம் ஜெயலலிதா பக்கம் உள்ளதுபோல் காண்பிக்கத் தொடங்கினார்.

ஆர்.எம்.வீ. ஆதரவாளர்களோ, ஜெயலலிதாவை விட மிகப்பெரிய எதிரியாக அ.தி.மு.க.வுக்குள் பண்ருட்டியை நினைத்து காங்கிரஸ் ஆதரவாளர், பாஸ்கரராவ் என்று உண்மையை விமர்சனமாக வைக்கப் போக அதையும் எம்.ஜி.ஆரிடம் பயன்படுத்தி விட்டார் பண்ருட்டியார்.

அப்பல்லோ மருத்துவமனைக்கு இந்திரா வந்தது. ராஜீவ் உதவிகளை எம்.ஜி.ஆரிடம் சுற்றுப் பயணங்களின் போது அடிக்கடி சொல்லி, வீரப்பன், காளிமுத்து காங்கிரஸ் எதிர்ப்பு நிலை எடுப்பது ஆபத்து என்று முடிக்கவே —

தன் உயிருக்கே ஆபத்து வந்த பொழுது விதிகளை மீறி இந்தியாவின் எந்த முதல்வருக்கும் தராத மரியாதையை தனக்கு தந்தவர்களை எதிர்ப்பது நன்றிகொன்ற செயல் என்று வீரப்பன் அணி மீது கோபம் கொள்ள வைத்துவிட்டார்!

ஜெயலலிதாவும் உடல்நிலை தேறிய எம்.ஜி.ஆரிடம் 84-85 ஆண்டுகளில் கட்சிக்குள் நடந்த பல்வேறு விஷயங்களை பற்றி எம்.ஜி.ஆருக்கு விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் — திருநெல்வேலி M.L.A.வாகிவிட்ட ஆர்.எம். வீயை 'வருங்கால முதல்வர்' என்று ஆர்.எம்.வீ. அணி அழைக்க தொடங்கியது.விழா நடத்தியது.

எம்.ஜி.ஆரின் அடிமனதில் பண்ருட்டியார் சொன்ன விஷயங்களால் ஆர்.எம்.வீ. மீது இருந்த கோபம் இதனால் குபீரென்று கிளப்பி பத்து மந்திரி நீக்கப் பட்டியலில் கடைசி நிமிடத்தில் ஆர்.எம்.வீயையும் சேர்க்க வைத்து விட்டது!

ஆர்.எம். வீயின் தலையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட நிலையில் இலங்கைப் பிரச்சனை கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

எம்.ஜி.ஆர். மாநில முதல்வர் என்ற முறையில் அடிக்கடி இலங்கைப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்க டெல்லி போக வேண்டி வந்தது.

74ம் ஆண்டிலேயே உரிமை வேட்கை பொறுப்பாசிரியர் செம்பியன் மூலமாக 'துரோகமாக' இலங்கைப் பிரச்சனை குறித்து அறிந்திருந்த பண்ருட்டியார் வெளியுறவு அதிகாரிகளை வியக்க வைக்கும் அளவு இலங்கைப் பிரச்சனையை எம்.ஜி.ஆர். சார்பாக பேசத் தொடங்கினார். பண்ருட்டியாரின் மௌனம் கலைந்த பொழுது தமிழக காங்கிரசாரின் நிலை குறித்து ராஜீவ் காந்தி யோசனை செய்து கொண்டிருந்தார்.

எத்தனை ஆண்டு காலமானாலும் தமிழக காங்கிரசார் தனியாக அரசியல் இயக்கமாக வளர்ந்து கட்சியைப் பிடிக்க முடியாத நிலை இருக்கும் பொழுது —

எம்.ஜி.ஆர். பண்ருட்டியை பயன்படுத்திக் கொள்ள நினைத்து விட்டது காங்கிரஸ் டெல்லி தலைமை.

எம்.ஜி.ஆர். ஜூலை மாதம் தனது உடல்நிலை காரணமாக அமெரிக்கா போக வேண்டி இருப்பதனால் இலங்கை பிரச்சனையும் இருக்கிறது. நீங்கள் இல்லாத நேரத்தில் இலங்கை நிலை தெரிந்த பண்ருட்டியாரிடம் பொறுப்புக்களை கொடுத்துவிட்டு போகலாமே என்று நாசூக்காக சொல்லவே தான —

இரண்டாவது நெடுஞ்செழியன் நிரந்தர இரண்டாவதாக நிறுத்தப்பட்டு விட்டு, பண்ருட்டியார் எம்.ஜி.ஆரின் பொறுப்புக்களை ஏற்க வந்துவிட்டது!

காங்கிரஸ், அ.தி.மு.க காங்கிரஸ் இணைப்பை விட இப்படிப் பட்ட உறவைப்போல நெருங்கியதனால் —

76ல் இந்திரா காலகட்டத்தில் என்ன நடக்க வேண்டும். எந்த தலைமை உருவாக வேண்டும் என்று நினைத்தாரோ அந்தக் கனவு காலம் கடந்தாவது நிறைவேற மாறத் தொடங்கியுள்ளது. 72ல் எம்.ஜி. ராமச்சந்திரன் உருவாக்கியது அரசியல் புரட்சி என்று சொல்லக் கொண்டால் 15 ஆண்டுகள் கழித்து வெள்ளைப் புரட்சியாகும்!

மின்சாரத் துறையில் கிட்டத்தட்ட ரூ. 1000 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் உண்டு. ஏராளமான மின்சாரக் கருவிகள், உபகரணங்கள் அரசு வாங்க வேண்டி வரும். அந்த வியாபாரத்தின் மூலம் நடக்கும் பேரங்களை மனதில் வைத்துத்தான் மின்சாரத் துறை பொறுப்பு பண்ருட்டியாரிடம் இருந்தபொழுது அதிகாரி விஜயராகவனைஎம்.ஜி.ஆர். அரவணைத்தார். எம்.ஜி.ஆரின் நோக்கத்தை பண்ருட்டியார் புரிந்து கொண்டுதான் மௌனமாக இருந்தார்!



MESல் பணிபுரிந்து கொண்டிருந்த மோகன்தாஸ் என்பவர் தான் பண்ருட்டியாரின் P.A வாக இருந்தவர். மோகன்தாஸ் முந்திரி பருப்பு ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டில் தான் அவரை விஜயராகவன் I.A.S. பதவி நீக்கம் செய்தார். பண்ருட்டியாரின் உதவியினால் மிகப் பெரிய அளவில் மோகன்தாஸ் முந்திரி பருப்பு ஏற்றுமதி வியாபாரம் செய்கின்றார் என்ற குற்றச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கேள்வி - பதில்

■ கிளார்க்கின் வெற்றிக்கு என்ன காரணம்? ராஜா, Paris

தொழிலாளர் கட்சியின் அமெரிக்க எதிர்ப்பு கொள்கை தான் காரணம் என நினைக்கிறேன்.

■ கிளார்க்கின் வெற்றி சாதனை தானே?

ஆமாம் இதுவரை எவரும் ஆங்கில பிரதமராக மூன்றுமுறை தெரிவு செய்யப்படவில்லை. இன்னும் ஒரு விஷயம், இது தனது கடைசி தேர்தல் இல்லை என்று வேறு இந்த அம்மணி கூறியுள்ளார் வெற்றிக்கு முன்பு.

■ ராஜீவ் காந்தி உணவுத்திட்டம் வெற்றிதானே?

நிச்சயம் வெற்றிதான். ஆனால் அதை முன்கூட்டியே செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். தனது பெயர் நிப்பெராகும் நேரம் பார்த்து அவர் மேற்கொண்ட இச்செயல் நமக்கு ஒருவகை ஐயத்தை ஏற்படுத்துகிறது. இருப்பினும் அவர் முயற்சிக்கு பாராட்டுக்கள். ஏன் எனில் இராணுவத் தலையீடும் சாத்தியம் என்று இலங்கைக்கு இதன் மூலம் உணர்த்தி விட்டார். [பார்க்க: தலையங்கம்]

■ இந்திய விமானங்கள் போட்ட உணவுகளை இலங்கை தடுக்கவில்லையே? ராஜா, Paris

இறைமையத்தில் ஜெயவர்த்தனா தனது புத்திசாலித்தனத்தை காட்டிவிட்டார். மானத்தை [illegible]

■ இந்திய போர் விமானங்களை இலங்கை அரசு ஏன் சுடவில்லை? குமார், Paris

நல்ல கதை போங்க சார். இலங்கையிடம் ஜெட் விமானங்கள் கிடையாது. விமான எதிர்ப்பு ஆயுதங்களெல்லாம் போர்த்துக்கீசியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உலகப்போர் காலத்திலும்.

■ கம்பரசம் வெளிவந்த நோக்கம் என்ன? கேள் Paris

கம்பரசம் 6 மாதங்களாகவே தயாரிக்கப்பட்டு வந்தது. இதற்கிடையில் ஒரு இதழ் படித்தேன். அறிஞர் அண்ணாவை சாதாரண அரசியல்வாதி என்றும் மொட்டையாக அண்ணாதுரை என்றும் எழுதி அதிலே எழுதப்பட்டு இருந்தது. தனது பேச்சால், அறிவால், எழுத்தால், சிந்தனையால் ஒரு சமுதாயத்தினை கட்டி எழுப்பி மறுமலர்ச்சி ஏற்படுத்திய ஆற்றலைக் அறிஞரை, காங்கிரசையே தோற்கடித்து சரித்திரம் படைத்த வீரத் திருமகனை, அமெரிக்க யேல் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்து கண்ணியப்படுத்திய ஒரு தலைவனை, ஆட்சிக்கு வந்த சில காலம் சம்பளம் பெறாமல் கொள்கை பிடிப்புடன் இருந்த ஒரு திருமகனை பேசுவதா, மனித உடைமையாக்கி பேதங்களை ஏற்படுத்தி சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளைப் படைத்த ஆரியர்களில் இருவர் இகழ்ந்துரைப்பதா? கேவலப்படுத்த முயல்வதா? அதை பார்த்துக்கொண்டு நான் சும்மா இருப்பதா?

குட்டிச்சுவர்கள் குதிரையைக் கட்டத் துடிப்பதுவோ? - அட நெட்டை மூங்கில் கட்டுக் கரும்பை எட்டி மிதிப்பதுவோ?

- என்ற கவிஞர் 1 தருக்கியின் கதை [நண்பன் ஓசை மலர்-1, பக்கம்-36] தான் ஞாபகம் வருகிறது.

ஆரியத்தின் மோசடி உரைப்படவேண்டும் என்பதற்காகத்தான் கம்பரசம் வைத்திருந்தேன். ஆனால் இன்று அது அண்ணாவின் அறிவையும், ஆற்றலையும் சேர்த்து அவ்வளவா வெளிப்படுத்த உதவுகிறது.

■ நண்பனை ஏன் மாசிமிகை

உள்ள இருக்கின்றீர்கள்? 10 ஃபிராங் காக வாங்கிய வெண்ணிறமான ஜாடை? கிரேவின் Paris.

வாசகர்கள் ஆர்வத்துடன் படிப்பதை கேட்கும் போது என் னாம் நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் போகும் சமயத்தில் இப்படி ஒரு கேள்வியா? வேண்டாம் நண்பரே! அதற்கு அவசரம் இல்லை. ஒரு வாசக நண்பரை கிழிப்பதை விட ஒரு நூறு ஃபிராங் கிழிப்பது நன்று.

■ SNCR சுற்றுலாவில் St. Vrain என்ற இடம் பற்றி விளக்க முடியுமா? நண்பி Belleville

அதற்கென்ன? அது ஒரு மிருகக் காட்சி சாலை. சுதந்திர மாக மிருகங்கள் சுற்றும் இருக்க நாம் பார்ப்போம். ஆனால் இங்கு நாம் பேருந்து போன்ற வண்டிகளில் சுற்றி மிருகங்களுக்கு ஹாய் சொல்லலாம்.

ஹோட்டல்களில் பார்க்கும் புதுமை பார்க்கும். கொஞ்சம் செய்யும் நம்பெருமிதம் உணவுகளை பெறும். புதை பொருட்களையும் தரப்புகளின் உள்ளே இருக்கும் பார்க்க ஒரு மணி நேரம் போதும். அதன் உள்ளே நாம் உணவருந்து வும் இடமுண்டு. அதுவும் திறந்த வெளியிலேதான் இருக்கும். நுழைவு கட்டணம் 20 ஃபிராங்கிற் குள் இருக்கும். மேற்பட்ட வாக னங்களிலேதான் உள்ளே செல்ல முடியும். எனவே குழுவாக செல் வது நன்று.

■ அரோமான்ஸ் கடற்கரை எப்படி?

பார்க்காத இடத்தைப் பற்றி போகாதவர் எப்படி சொல்ல முடியும். சுற்றுலா மையம் என்று கேள்வி.


■ நீஸ் கடற்கரையைப்

www.tamilarangam.net



பிரெஞ்சு நாட்டின் மிகவும் அழகிய இடம். அதன் கடற்கரையின் வர்ணத்தின் அழகை எப்படி வருணிப்பது என்றே தெரியவில்லை. சிலர் பனிப்பாறைகளை, பனியோரங்களை பார்க்கச்செல்வர். ஆனால் இயற்கை எழிலை பார்க்க வரும் புலவோர் சொர்க்கமே போய் வருவர். அவ்வளவு அழகு- களைப் பார்த்தால் இதை வருணிக்க வார்த்தைகளைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சியே மேற்கொண்டு வைவான்.

**எம்.**ஜி.ஆர். உடல்நிலை குறித்து பஸ்சில் விமர்சனம் செய்த பஸ்டிரைவர் ஒருவரை சென்னை அ.தி.மு.க. வட்டசெயலாளர்களில் ஒருவர் குத்திக் கொலை செய்துவிட்டார் என்று செய்தி படித்திருக்கலாம். உண்மையில் தகராறு பஸ்சில் நடக்கவே இல்லை என்கிறார்கள். கொலை செய்யப்பட்ட டிரைவர் தேனாம்பேட்டை திருவள்ளுவர் ரோடில் உள்ள தனது வீட்டிற்கு அருகில் இருட்டில் ஒரு பெண்ணை மூவர் கற்கழிக்க முயற்சிசெய்வதை பார்த்திருக்கின்றார். அதைத் தடுக்கப்போன டிரைவரை குத்திக்கொலை செய்திருக்கின்றார்கள். கொலைக்குப் பிறகு கொலையாளிகள் அருகில் உள்ள கடைகள் சிலவற்றில் கலாட்டா செய்தார்கள் என்கிறார்கள் தேனாம்பேட்டை மக்கள். எது உண்மை என்பது நிச்சயம் காவல்துறைக்கு தெரியும் என்றும் அவர்கள் சொல்கிறார்கள். பஸ் டிரைவர் பஸ்சில் கொலை என்றால் பல்லவன் ஸ்டிரைக் நடந்திருக்கும். ஏன் நடக்கவில்லை என்று கேட்பதிலும் நியாயம் உண்டுதான்!



www.tamilarangam.net


# எமது வாழ்விலே

[“சொல்லித் தெரிவதுதான் கலைக்கலை” என்று உரைக்கும் ஒரு பாமர இயல் வல்லுனனின் உண்மை வரலாற்றில் 90% மற்றவை கற்பனை]

வில்லிக்கும் கதாநாயகி எனக்கு எப்பவது மற்றாரு என்னுடைய தம்பியின் கையில் தங்கைக்கு எழுதப்பட்டிருக்க கிடைத்த கடிதம் அவனுக்கு வேண்டும். ஆச்சரியத்தை அளித்தது ஏன அப்படி எழுதப்பட்டிருந்தால் உயர்தான். **பாலன்** என் தம்பிக்கு மட்டுமல்ல

அவன் என்ன? உங்களுக்கும் ஆச்சரியம்தான். நீங்களும் கூட ஆச்சரியப்படுவீர் காரணம் இருவருமே கள். புது முதலாளியிடம் வேலை

புது முதலாளி ஒரு ஏழைக்கு செய்தது கொஞ்சம். எழுதிய கடிதம் மூலம் ஆச்சரியம். ஏன் பெரியது கூட உங்க

இரண்டாவது என் தங். உண்மை என்னவென்றால் அவ ளைக்கு அந்தமும் முதலாளி கடிதம் வந்தது எனக்கெப்படியா எழுதியிருப்பார் என்று அவன் அப்படி என்றால் நான் நினைக்கும்போது அவளுக்கு மற் தானா நாயகியா? ஒரு ஆச்சரியம். பொழுதன் சுற்ற நீண்ட வி

ஏன் என்றால், என் தங்கை ஜோதி லண்கனில் நானும் இருந்தே. எப்படிப்பட்ட கடிதம் எழுதும் அப்படி இருக்கும் என்னார் பொழுது ஊரில் இல்லை. அவனை என்ன நாயகியா

அப்படி என்றால் ... உருக்கினான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே, நான் வாசிப்பவர்,
...பாவங்களை என்பது ...வையும்,
...வைக்கும். ...களில் பிஸ்க்கும்
புரியாது.
எனவேதான்
...லிகம் நாயகி என்று
நான் ...லின் அதிகம்
...விய கொள்கிறேன்.

இது எப்படி என்பதை
...க்கால் அது சிறு தொடர்
...தை ஆக்கும். எனவே,
தொடர்கதையில் இதை நீங்கள்
புரிந்து கொள்ளலாம்.
...வகும் முறைக்கமான இப்.
பிரச்சினை எப்படி உருவானது
...மை என்ன என்பதையும்
தொடரில் கண்டு கொள்க.

## விலிலன் - ௨

என் அண்ணன்
...பான மடையன்.
...வுக்கு புது முதலாளி
...யும் கடிதம் எப்படி அனுப்பி
...பார். எல்லாம் அந்தப்
...வன் வேலைகளை...

அவனை தொட்டுக்கி விட
வேண்டியவனுதானே? என்னிடம்
அண்ணன் மெதுவாக வாயைத்
திறந்து சொன்னான். நான்
உடனே,

"என்டா அதிர்ப்போய்
...ஏதும் ஆபத்து வந்
தான். அவனை ஏதோ இருக்கு
திருக்க வேண்டியவனாகனா."
என்றேன்.

"டேய் அவனை
திருக்கினால் முதலாளி நம்மிடம்
சும்மா காட்ட மாட்டார். முதலாளி
மாதிரி பேசாதே."
என்றேன்.

அவன் சொன்னது
நியாயமாகவே எனக்குத் தெரிந்
தது. எனவே என் சொன்னது ...
என் மௌனம் உடனே
துணிந்தது.

"சரி என்னதான் செய்வது
நான்."

அந்தப் பொழுதின

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடக் கூடாது".

"இல்லை அது சரி வராது. அவன் வீட்டிற்கு வரக்கூடாது என்றால் அப்போதும் முதலாளி வருத்தப்படுகிறானே; செய்வார்" நான்.

"சரடா சொல்வதைக் கேள். அந்தப் பொடியனை வீட்டிற்கு வரக்கூடாது என்று சொல்ல முடியாது. எனவே, அவன் இன்மேல் அக்காவிற்கு வந்தக்கூடும் தூரமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு. மறந்து விடாதே."

"அப்படித் தடுத்து விட்டால் மட்டும் முதலாளிக்கு தெரிந்து விடாதா என்ன?"

"உன்னை யார் சேரி-மையாக தடுக்க சொன்னது. பொடியன் வரும்போது அக்கா வின் பின்னிலையில் நாம் இருந்தால் அவன் எப்படி கதைத்துக் கொள்வான்?"

"ஏன் முடியாது"

"எப்படிடா கொப்பான். நீ தற்செயலாக அங்கு இருப்பது போல நடி. பொடியனும் நாம் அங்கு தற்செயலாக இருப்பதாக எண்ணிக்கொண்டு பிறகு வந்து கொடுக்க எண்ணி போய் விடு வான். எளிதாக எனவே அவன் கொடுத்து விட முடியாது. அப்படியே அவன் கொடுத்தாலும் அக்கா நம்மை மீறி ஒன்றும் செய்துவிட முடியாது. பயப்படாதே."

"ஆமாண்டா. நீ சொல்வதும் சரிதான். உனக்கும் சமயங்களில் மூளை நன்றாக வேலை செய்கிறது."

"பேய் நான் உன் அண்ணனடா"

"முன்பெல்லாம் உன் மூளை இப்படி வேலை செய்யாதே. அதனால் தான் சொன்னேன்."

"நீ சொல்வதும் உண்மை தான். முதலாளியின் அருகே இருப்பதால் அவருடைய

தமிழ்த் தேசிய ஆவணச்சுவடிகள்

www.tamilarangam.net



திறமை யாவும் வந்துவிட்டது என நினைக்கிறேன்.

"அது என்னவோ எனக்கு தெரியாது. இனிமேல் பொழுது விஷயத்தில் கவனமாக இரு. நீ காசு என்றால் பல்லைக்காட்டு வாய். நம்முடைய ஜாதி என்ன? கௌரவம் என்ன" நான் முழித்தேன்.

அறிமுகத்தொடர் இத்துடன் முடிவுற்றது.

அடுத்த இதழில் தொடர்கதை ஆரம்பம்.

---

தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி யாருடைய பெயரையும் போஃபார்ஸ் நிறுவனம் வெளியிடாது என்றும் யார் நிர்ப்பந்தப்படுத்தினாலும் கமிஷன் பெற்றவரின் பெயரைத் தாங்கள் வெளியிடப் போவதில்லை என்றும் போஃபார்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

கண்ணதாசன் பிறந்த நாள்

ஜூன் 25

கவிஞர் கண்ணதாசனின் மணிவிழா சென்னையிலுள்ள தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. கண்ணதாசனின் இளைய மகள் விசாலாட்சிக்கு நடிகை லட்சுமி பொன்னாடை போர்த்தினார். 'கவியரசு கண்ணதாசன் கழகம்' என்ற அமைப்பின் தொடக்க விழாவும் நடைபெற்றது.

● சமீப நாட்களில் அ.தி.மு.க.வில் பலருக்கு வருத்தம்! ஒரு வருஷத்திற்கு முன்பு செய்து கொண்ட திருமணத்தை இப்பொழுது செய்துக் கொண்டிருக்கலாம் என்கிறார்கள்! ஏன் என்று கேட்டோம்! இப்பொழுதெல்லாம் எம்.ஜி.ஆர். எந்த திருமணத்திற்கு போனாலும் மணமக்களுக்கு தலா ரூ. 25 ஆயிரம் என்று பிரசென்ட் செய்வது தான் என்கிறார்கள்!

● காளிமுத்து முன்னால் அமைச்சராக இன்றும் பழைய வீட்டிலேயே இருந்தாலும்; புதிய இடம் தேடி குடி போக நினைக்கின்றார். Phone Bill கட்டமுடியாது என்பதால் போனை கட்பண்ணிவிட்டார். Phone ஏதாவது செய்ய வேண்டும் என்றால் சுற்றுலாத்துறைத் தலைவர் பாலகுரு ரெட்டியார் வீட்டிற்கு போகிறாராம். கடைசியாக கிடைத்த தகவல் காளிமுத்து MLA ஹாஸ்டலில் ரூம் கேட்டு சபாநாயகரிடம் விண்ணப்பத்திருக்கின்றார் என்பது தான்.

● தாமரைக்கனியைத் தொடர்ந்து நெகமம் கந்தசாமியும் வீரப்பன் அணியில் இருந்து விலகி விட்டார். எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா படங்கள் போட்டு வால் போஸ்டர் அடித்து அந்த வால் போஸ்டரில் நெகமம் பெயர் வருகிறது என்றால் மாற்றம் புரியும். அடுத்த அம்பு சைதை துரைசாமிக்கு என்கிறார்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ாமரசத்தை எவ்வளவு கருத்தோடு களிவோடு கம்பர்
கிருர் என்பதைப் பாருங்கள். முதலிலே பஞ்சணையின்
, பிறகு பாவையரின் வர்ணனை பிறகு ஆடவரும்
டிரும் பக்கத்தில் படுத்து உறங்கும் காட்சியின் வர்ணனை.
வேயாக அத்தோடு விட்டார்! அன்னத்தின் மெல்லிய
. இலவம் பஞ்சு, செம்பஞ்சு, மயில் தூவி, வெண்பஞ்சு
இந்த ஐந்து பொருளினுலும் செய்யப்பட்ட மெத்தை
கப்பட்டிருந்ததாம்.

ஞ்சணையிலே! ஆகா! எவ்வளவு கோலாகல வாழ்வு.
த்திரத்தின்படி! அந்தப் பெண்களோ காமநோயூட்டும்
ன்ராம்! அவர்கள் உபசரித்து உறங்கினர். பஞ்சணையில்
தில்; அப்போது மைந்தரும் துஞ்சினர்! ஏனப்பா
ய் வராது? கம்பரசம், காமரசம் என்பதை இப்பாடல்
விளக்கும் என்ருலும், அப்பாடலிலே அணங்குகள்
வே ஆடவரும் தூங்கினர் என்று முடிக்கிருரே, அதிலே
யுள்ள காமரசம், அட அடா சொல்ல முடியாது!

இனிப் பதவுரையைப் பாருங்கள், என் பொழிப்புரை
என்பது தெரியும்.

அஞ்சு அடுத்த அமளி—அன்னத் தூவி, இலவம் பஞ்சு,
பஞ்சு, மயில் தூவி, வெண்பஞ்சு எனும் ஐந்து பொருள்
லான படுக்கை மெத்தையிலே;

அலத்தகம் பஞ்சு அடுத்த—செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்
ற!

பரிபுரம் பல்லவம்—சிலம்பணியை அணிந்த தளிர்
ன்ற பாதங்களையும்!

நஞ்சு அடுத்த நயனியர்—(காம நோயையூட்டும் கார
தால்) விஷம் போன்ற விழிகளையுடைய தேவமகளிர்;

நவ்வியின் துஞ்ச—பெண் மான்கள்போல அருகிற் படுத்து
ங்க;

அத்தனை மைந்தரும் துஞ்சினர்—பரதன் சேனையிலுள்ள ஆடவர்களனைவரும் உறங்கினர்கள்!

திருவடி சூட்டுப் படலம் 11-வது செய்யுள் இது, பரதனின் சொந்தச் சரக்கல்ல!

அத்தனை மைந்தரும் என்று கவி கூறிரை, அதன் கருத்தைப் பிரிதோர் பாடலில், 12-ல் விளக்கமாகவே உரைக்கிருர். வேந்தராதி சிவிகையின் வீங்குதோள் மாந்தர் காறும் அந்தத் தேவமாதர் உபசரித்தனராம் அதாவது, வேந்தர் ஆதி —அரசர் முதலாக, சிவிகையின் வீங்கு தோள் மாந்தர் காறும்—பல்லக்குத் தூக்குவதால் வீங்கிய தோளையுடைய மனிதர்கள் ஈருக அனைவரையும், அம்மாதர் அன்போடு உபசரித்து, அளவளாவி, அம்சதூளிகா மஞ்சத்தில் அருகே படுத்திருந்தனர். இந்த ஆரியத் திருத்தொண்டு புரிய அவர்களை அழைத்தவர், பரத்துவாசர்.

இந்த லோகத்தில் புண்ணியம் செய்தவர்கள் சொர்க்கம் புகுவார்கள் என்று கூறுகின்றனர், அங்ஙனம் புண்ணியம் செய்தால், தேவமாதரானவர்களின் தொண்டு இப்படி விலைகளா விபசார விடுதியை நடத்துவதுதானு? இதுதான் சொர்க்கலோக வாசமா? ஒரு முனிவரின் விருந்து வைபவம் இவ்விதந்தான் இருக்க வேண்டுமா? ஒரு அரசகுமாரனின் அவதியைப் போக்கச் சென்ற படை, வழியிலே இந்த "வேட்டை"யிலே ஈடுபடுவதா? சுவர்க்கத்திற்குத்தான் இது யோக்கியதையா? ரிஷிக்குத்தான், இது நியாயமா? வீரருக்கு இது அழகா? இந்தக் காட்சியைக் கடவுளின் திரு அவதாரக் கதையிலே புகுத்தியதற்குக் கம்பருக்குக் காமரசத்திலே இருந்த மட்டற்ற பாசமன்றி வேறு என்ன காரணங் கூறமுடியும்? கலா ரசிகர்களே! சற்றே தயை செய்து பதில் கூறுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம். ஜி. ஆர். ஒரிஜினலா? டூப்ளிகேட்டா?

மக்கள் திலகம், பொன்மனச் செம்மல் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றி இப்போது மக்களிடையே பலத்த சந்தேகம் உருவாகி விட்டதாம்.

அது என்ன சந்தேகம்? உண்மையிலேயே நமது முதல்வர் ஒரிஜினல் எம். ஜி. ஆரா? அல்லது டூப்ளிகேட் எம். ஜி. ஆரா? என்பது தான்.

ஏன் என்றால் எம். ஜி. ஆர். அவர்கள் கடும் நோயால் பாதிக்கப்பட்டு மரணப்படுக்கையில் விசேட விமானத்தில் காற்று தும்பு தூசி படியாமல் அமெரிக்க மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டதும்-அங்கு அவருக்கு மிக சீரியஸான அறுவை சிகிச்சை செய்தும் அவர் அறைகுறையாக குணமாகி சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பிய எம். ஜி. ஆர். கண்ணாடிக் கூண்டிற்குள் அமர்ந்த வாறு பரங்கிமலை மைதானத்தில் லட்சக்கணக்கான மக்களுக்கு காட்சியளிக்க தமிழ்நாடு அரசு

வீரப்பன் - ஜெயலலிதா கோஷ்டிகளை வளர்த்தார்!

அமெரிக்காவிலிருந்து வந்தவுடன் தனது இதயக் கனியாக இருக்கக்கூடிய கொ. ப. செ. செல்வி ஜெயலலிதாவிடம் பல நாள் டெலிபோனில்கூட பேசாமல் இருந்தார்! பின்பு திடீர் என்று கட்சியின் பொறுப்புகளை அறிவித்தார்.

கட்சியில் வீரப்பன்-ஜெயலலிதா கோஷ்டிகள் இடையே ஒருவரையொருவர் தூண்டிவிட்டு மோதலை உருவாக்கினார்! இரண்டு பேர்களையும் அரவணைக்கிறார். பின்பு இரண்டு பேர்களையும் கண்டிக்கிறார்.

திராவிட இயக்கத்தின் நீண்ட நாள் போராட்டமான இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு தெரிவிக்காமல் மத்திய அரசுக்கு ஜால்ரா போடுகிறார்.

**புதிய எம்.ஜி.ஆரின் திடீர் பிரயோகங்கள்!**

சில சமயங்களில் தாமே அறிவி... டங்களை வாபஸ்

இரண்டு பேரையும் தட்டிக் கொடுத்தார்!

கவர்னரை ஓவர்லுக் பண்ணி அறிக்கை விடுகிறார்! அதன் பின்பு வாபஸ் வாங்கிக் கொள்கிறார். வெண்ணிற ஆடை நிர்மலாவிற்கு எம்.எல்.ஸி. பதவியை அறிவித்தார். ஹைகோர்ட் அப்பதவி செல்லாது என தீர்ப்பு வழங்கியது. மேல்சபையே கலைத்து விட்டார்.

அதனால் டாக்டர் கலைஞருக்கும் தனது மந்திரி சபையில் உள்ள இரண்டு மந்திரிகளுக்கும் பதவி இழக்கச் செய்தார்! பதவி இழந்த மந்திரிகளில் ஒருவரும் நீண்ட நாள் தனது அந்தரங்க சீடருகை இருந்த இராம வீரப்பன் நெல்லை இடைத்தேர்தலில் போட்டியிட சீட் கொடுத்தார்.

**வாழ்த்திய வீரப்பனை வீழ்த்தினார்!**

திரு வீரப்பனார் வெற்றி பெற்றார்! மீண்டும் மந்திரியானார். ஊழல் செய்த பத்து மந்திரிகளை நீக்குவதாக அறிவித்தார். திடீர் என ஒரு நாள் அமைச்சர் வீரப்

தி. மு. கழகத்தின் பத்து எம். எல். ஏக்கள் சட்ட நகலை எரித்தார்கள் என்று சட்ட சபையை விட்டு விலக்கிவிட்டார். அண்ணாவின் உண்மைத் தம்பி நம்ம எம். ஜி. ஆர். இப்படி செய்வாரா?

இந்த வருடம் பொங்கலன்று தன்னை யாரும் வந்து வாழ்த்துரை கூறக்கூடாது. காரணம் அண்ணன் எம். ஜி. சக்கரபாணி இறந்து ஒரு வருடம் ஆகவில்லை, பொங்கலைக் கொண்டாடவில்லை என்று விளம்பரம் செய்தார். இது திராவிடப் பாரம்பரியமோ என்னவோ?

இந்தி எதிர்ப்புப் போரின் தியாகிகள் நினைவு நாள் கொண்டாட ஜெயலலிதாவின் மூலமாக கட்டளையிட்டார்! ஆனால் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. அது மட்டுமா? அறிஞர் அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கத்தில் மலர் அஞ்சலி செலுத்த வரவில்லை.

குறிப்பிட்ட நாளில் கர்னாடகாவில் ...... மூகாம்பிகை கோயிலில் சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கிறார். திராவிடப் பாரம்பரியம் என்றும் இது அண்ணாவின் அரசு என்றுச் சொல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனல் நடந்த சம்பவமும் அனை வரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி யது! விமானத்தில் இருந்து தட தட வென இறங்கி வந்தார்! கண்ணுடிக் கூண்டு வேனில் நுழை யாமல் சாதாரண காரில் ஏறி பரங்கிமலை மைதானத்தில் குழுமி இருந்த மக்களின் முன்பு வழக்கம் போல் இரு கரங்களை கூப்பினுர்! இரண்டு விரலைக் காட்டினுர்.

மேடையின் முன்பு அமர்த் திருந்த மற்ற அமைச்சர் பிரதானி களை கைகளை அசைத்து மேடைக்கு வரும்படி அழைத்தார். மக்களும் ஆச்சரியப்பட்டார்கள்! சக மந்திரிகளும் வியந்தனர்,

**அமெரிக்க நடிகராக இருப்பாரோ?**

முதலமைச்சர் பதவியை முப் பிறவி எடுத்து மூன்ரும் முறை யாக் பொறுப்பேற்றுக்கொண்ட திலிருந்து இன்று வரை இப்போ துள்ள எம். ஜி, ஆர். அவர்களின் நடவடிக்கையைக் காணும்போது சக அமைச்சர்களுக்கே சந்தேகம் வலுத்து விட்டதாம்!

இவர் ஒரிஜினல் எம். ஜி. ஆரா? அல்லது அமெரிக்காவில் உள்ள யாராவது ஒரு நடிகராக இருப் பரோ என்று!

திட்டத்தை அறிவித்து கேலிக் குரியவராக ஆகிவிட்டார்.

ஒப்புக்கொண்ட பல நிகழ்ச்சி களுக்கு திடீர் என்று ரத்துச் செய் கிறுர்! அவரை அழைக்கப்படாமல் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு திடீர் பிரவேசம் செய்கிறுர்!

தனது சகோதரர் எம். ஜி. சக்கரபாணி, அவரது பிள்ளை களின் நடவடிக்கைக்கு தாம் பொறுப்பாளி அல்ல! என்று அரசு சார்பில் விளம்பரங்களைச் செய்கிறுர்.

**பம்பும் இல்லை! பைப்பும் இல்லை!**

தம்மைச் சந்திக்க வந்த தமி ழாசிரியர்கள் போராட்டக் குழு வினரிடம் பம்பும் இல்லை பைப்பும் இல்லை என்ருர். குழுவினர்களுக்கு ஒன்றும் புரியாமல் தலையை பிய்த் துக் கொண்டார்கள்! அவரது அந்தரங்கச் செயலாளர் தான் சொன்னுர் "பம்பு என்ருல் 'பண்பு' பைப்பு என்ருல் படிப்பு;' என்று. அப்போதும் சந்தேகப்பட் டார்கள். இவர் நம்ம எம். ஜி. ஆர். தானு என்று?

**நடிகைக்காக மேல்சபை ஒழிப்பு!**

அமைச்சர் காளிமுத்துவிற்கும் செல்வி ஜெயலலிதாவிற்கும் இடையே அறிக்கைப் போர்கள்!

அமைச்சரவையிலிருந்து நீக்கினுர், அப்போது திரு காளிமுத்தவிற் கும் பதவி பறிபோனது.

கட்சியில் வீரப்பன்-காளிமுத்து கோஷ்டிகளை ஒழித்தார். ஜெய லலிதா கை ஓங்கியது. அதிலும் ஜெயலலிதா கோஷ்டிகளில் உள்ள இரண்டு எம். எல். ஏக்களை கட்சியிலிருந்து டிஸ்மிஸ் செய் தார்.

**கைப்பாவை மோகன்தாஸை ஏன் பழிவாங்கினுர்!**

ஈழத்தமிழர் போராட்டக் கோஷ்டிகளில் பிரபாகரன் தலை மையிலான கோஷ்டிகளை மட்டும் ஆதரித்தார். பின்பு அதே பிரபா கரன் கோஷ்டியில் உள்ளவர் களிடமிருந்து ஆயுதங்களைப் பறித் தார். தமிழக போலீஸ் தலைமை அதிகாரி டி. ஜி. பி. மோகன் தாஸை வைத்துக் கொண்டு பலரை பழிவாங்கினுர். பின்பு அதே மோகன்தாஸை பதவி மாற்றம் செய்து பழி வாங்கினுர்.

**ஒருபுறம் இந்திக்கு எதிர்ப்பு! மறுபுறம் தமிழருக்கு துரோகம்**

டாக்டர் கலைஞர் அவர்கள் மொழிப் போரை முடுக்கி விட் டார். பேரறிஞர் அண்ணு வழி நின்று போராடிய கலைஞரை கைது செய்து 45 நாட்கள் சிறைச் சாலையில் வைத்தார்.

காட்சியளிக்கிறுர்.

**அமைச்சர் கே. ஏ. கேயை, ஏன் ஒதுக்கினுர்?**

அமைச்சரவையிலிருந்து இராஜினமா செய்த திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு மந் திரி பதவி கொடுத்தார்!

அண்மையில் சென்னையில் நடந்த திரு. கே. ஏ. கே. அவர் களின் மகளின் திருமணத்தை எம்.ஜி.ஆர். நடத்தி வைப்பதாக இருந்தது! கவர்னரும் சக அமைச் சர்களும வந்து விட்டார்கள்! ஆனல எம்.ஜி.ஆர். வரவில்லை! மாலையில் நடந்த மணமக்கள் வர வேற்பில் கலந்து கொள்ளாமல் அதே சமயம், நகரில் மாலையில் ஒரு நடிகை விட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்! திடீர் என்று கே.ஏ.கே. அவர்களின் மந்திரிப் பதவியை டிஸ்மிஸ் செய்தார்.

**ஒரிஜினல் எம் ஜி.ஆர். எங்கே இருக்கிறுர்?**

ஆகவே இப்போது அவரது கட்சியிலும் — தமிழக மக்களிடை யேயும் சந்தேகம் மேலும் மேலும் பலமாக வலுத்துவிட்டது. உண் மையான நமது எம்.ஜி.ஆராக இருந்தால் இப்படி நடந்து கொள் வாரா? இவர் ஏன் டூப்ளிகேட் எம்.ஜி.ஆராக இருக்க முடியாது? என்று ஒரிஜினல் எம். ஜி. ஆர். இப்படியெல்லாம் நடந்து கொள்ளமாட்டார் தான் என்று வதந்தி பரவிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெபனுனின் துயரம்

லெபனுன் பிரதம மந்திரி திரு. ரஷீத்க ராமி கொல்லப்பட்டிருப்ப தானது, அந்நாட்டின் துய ரங்களை அதிகரிக்கவே செய் யும். அரசியல், பொருளா தார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் அந்நாட்டில் பல பிரிவினரி டையே கோஷ்டிச் சண்டை கள் நடந்து கொண்டிருக் கின்றன. இதனுல் அந்த நாடு பல ஆண்டுகளாகவே அமைதி இழந்து காணப்ப டுகிறது. இந்த நிலைமையில் கராமியின் மரணமானது, அந்நாட்டில் ஒரு பெரிய நெருக்கடியை உண்டு பண் ணக்கூடும்.

திரு. கராமி கடந்த முப் பது ஆண்டுக் காலத்தில் உள்நாட்டு அரசியலில் முக் கியமான பங்கு வகித்திருக் கிருர். பத்து தடவை நாட் டின் பிரதம மந்திரியாகப் பதவி வகித்திருக்கிருர் என் பதிலிருந்து அவருடைய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். அவர் அரபு நாடுகளுக்கு நெருக்க மானவராயிருந்தார். பல் வேறு கோஷ்டிகளிடையே இணக்கத்துக்கும் தேசிய ஒற் றுமைக்கும் முயற்சி செய் தார். அவருடைய முயற்சி வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியாது. எனி னும் பொருளாதார நெருக் கடி காரணமாக சென்ற மா தம் திரு. கராமி ராஜினாமா செய்தபோது, நாட்டில் அவருக்கு இருந்த செல்வாக் கைக் கருதி அதனை ஏற்றுக் கொள்ள ஜனுதிபதி திரு. கெமெய்ல் மறுத்துவிட் டார். இப்பொழுது திரு. கரா மியின் மரணத்தை யடுத்து திரு சலீம் ஹாஸ் என்பவர் தற்காலிக பிரதமராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

திரு. கராமி மரணம டைந்த சூழ்நிலைமை மிக வும் மோசமானது. அவர் பிரயாணம் செய்த ஹெலி காப்டர் விமானத்தில் குண்டு வெடித்து இறந்திருக் கிருர். இந்தச் செயலைப் புரிந்தது யார் என்பது தெ ரியவில்லை. இது பற்றி விசா ரணைக்கு உத்தரவிடப்பட்டி ருக்கிறது. இந்தச் செயலை யார் செய்திருந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டிய தே. பயங்காவாதிகளின் இத்தகைய செயல்களினுல், ஒரு பிரதமரின் உயிர் பறிக் கப்பட்டு விட்டது. இந்தச் செயலினுல் அங்கு ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. ஆனுல் பல்வேறு பிரிவினரி டையே மோதல்கள் அதிக ரித்து குழப்பம் மேலும் அதிகரிக்கலாம் என்ற அச சம் நியாயமே.

# கனடா

இலங்கையில் தமிழர் பிரச்சி னைக்கு தீர்வு காண்பதில் உதவ கனடா இன்று முன் வந்தது.

"மோதலில் சம்பந்தப்பட் டுள்ளவர்கள் அவ்வாறு விரும் பினுல், எந்த வகையிலும் உதவ கனடா தயாராக உள்ளது. என வெளியுறவு விவ கார அமைச்சர் ஜே. கிளார்க் கூறியதாக கனடா ஹைகமி ஷன் வெளியிட்ட ஒரு பத்திரி கைக் குறிப்பு கூறுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கை அரசு தெரிவித்த பிரேரணைகள் "நியாயமான வை" என்றும் "அரசியல் தீர் வுக்கான அடிப்படையாக அதைக் கொள்ளலாம்" என் றும் கனடா கருதுவதாக கிளார்க் கூறினர்.

ர்ஷாத் முயற்சி

டாக்கா (வங்கதேசம்), ன் 4—இந்தியாவிற்கும், ங்கைக்கும் இடையே சமர செய்து வைக்க வங்கதேச பர் ஹெச்.எம். எர்ஷாத் ராக இருப்பதாக, அந் டின் வெளியுறவு செய ர் நஜ்ருல் இஸ்லாம் வியா ன்று கூறினர்.

இலங்கையின் வடக்குப் பில் நிலவும் கலவரம் ர்பாக, இரு நாடுகளுக் இடையே தோன்றியுள்ள த்தை தணிக்கும் நோக் இந்த உதவியை ப எர்ஷாத் முன்வந்திருப் அவர் தெரிவித்தார்.

து தொடர்பாக பிரதமர் காந்தியுடன் இலங்கை ஜெயவர்த்தனவுடனும் த் தொலைபேசி மூலம் தாக அவர் குறிப்பிட்

தற்காசிய நாடுகளின் திய ஒத்துழைப்பு ப்பில் அங்கம் வகிப்ப இந்த உதவியைச் செய்ய நாடு முன் வந்திருப்ப வங்கதேச வெளியுறவு ளர் கூறினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நண்பன் பதில் மடல்

மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய நண்பர் வீரப்பன் அவர்களுக்கு,

வணக்கம். தங்களின் நட்பை முகம் மலர அகம் மகிழ ஏற்றுக் கொள்கிறேன். தங்களின் தமிழ் ஆர்வத்தை, ஆர்வத்திற் கேற்ற செயல்முறைகளை தங்களின் கடிதம் மூலம் உளமாற உணர்ந்து பெரிதும் உவகை அடைகிறேன். தங்களின் எந்த நன்முயற்சிக்கும் என்றும் முழுந்த ஒத்துழைப்பை நல்க தயாராக இருக்கிறேன். தமிழ்மொழியால் ஏற்பட்ட நம் உறவு தொடரும் என நம்புகிறேன். தங்களின் நற்பணிகளில் எதிர்படும் இன்னல்களை தாங்கள் பொறுமை உணர்வுடன் சகித்து குறிக்கோளில் வெற்றி அடைய இதயங்கனிந்த எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் எடுத்த அழைத்து அரிது பொன்னான சந்தர்ப்பத்தை பல்வகைய அறிவார்ந்த சொற்பொழிவுகளை, அறிமுகங்களை சிலநாட்களிலேயே பெற்றுத்தரும் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த பெரிதும் முயற்சிக்கிறேன். பலவேறு இன, மொழி நாட்டு அறிஞர்கள் மதுரையில் பேச இருக்கும் மாநாட்டுக் கற்பனையே மிகுந்த மனநிறைவைத் தரும் போது அதன் முக்கியத்துவம் அறியமுடிகிறது. தங்களின் நட்பிற்கும், அறிவிப்பிற்கும், அழைப்பிற்கும் மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நண்பன் வாயிலாக அறிமுகமானதால், நண்பன் வாயிலாகவே வளர்வதை விரும்புகிறேன். திரு. சவரியார் அவர்களுக்கு என் நன்றி கலந்த மரியாதையை அர்ப்பணிக்கவும்.

நான் தமிழில் புலமையோ, பாண்டித்யமோ உடையவன் அல்ல. கல்லூரி நாட்களில் நான் நன்றாக தூங்கும் வகுப்பு தமிழ் இலக்கண வகுப்பின் போது தான். இன்னும் சொல்லப்போனால் எனது தாய்மொழி கூட தமிழ் அல்ல. இருப்பினும் தமிழில் எழுத்துப்பணி ஆரம்பிக்கும் ஆர்வம் முறையற்ற பத்திரிகைகளை பார்க்கும் போது அவ்வப்போது தோன்றுவதுண்டு. அது பெரும்பணி சுமையானது, சிரமமானது என்ற உணர்-வினால் ஆர்வம் அடிக்கடி விடுமுறை எடுத்துக்கொள்ளும்.

"பாரிஸர்" என்ற மாதத்தைப் பார்த்த பின்புதான் சிறு முயற்சியிலும் ஆர்வத்தை வெளிப்படுத்தி செயல்படுத்தலாம் என்பதை உணர்ந்து கொண்டேன். சில கணக்கு வழக்குகள், நண்பர்களிடம் ஆலோசனை, புள்ளி விபரங்களை ஏன் பார்த்த பின்பு சில மாதங்களில் கோரிய எண்ணம் நிறைவேறியது. இன்று நண்பர் சிறு முயற்சியாகவே, பகுதி நேர உழைப்பாகவே வெளி வருகிறது. எனவேதான் ஒரே நிலையிலில்லாமல் பல நிலைகளில் அது வருகிறது. எழுத்தாளருக்கு அது புரியும் அதாவது அடுத்த இதழ் எப்படி இருக்கும் என்பதை திட்டவட்டமாக சொல்ல இயலாது.

பிற பின்னர் வரைகிறேன்.

அன்புடன்

www.tamilarangam.net



[illegible]

# 4th International Conference On Tamil Culture

## 29, 30, 31-8-1987

[illegible] Delegate Reg. Form

1. முழுப்பெயர் Full Name. IC/No
2. முழுமுகவரி Full Address
3. நாடு Nation அகவை Age
4. உறுப்பினரான கழகம் / உ த ப இ. கிளை பொறுப்பு Which delegate's Association

ISTC Branch

5. என்ன பொறுப்பு? Position?

பேராளர் கட்டணம்/Fees B.P. Order/Draft/Cash

M $50.00; IRs 250.00; US $ 20.00; B.P.O. £ 10.00

பார்வையாளர் கட்டணம் M $ 25.00
Observer Fees M. $ 25.00

இக்கண்

Sig ஒப்பம்

To Address:
Movement for Tamil Culture,
110, Jalan Bangau, Berkeley Garden
41150 Kelang, Selangor

ஒப்பம் Sig. Secretary முன்மொழிபவர்

SEAL

ஒப்பம் Sig Chairman வழிமொழிபவர்

www.tamilarangam.net



MALA மாலாஸ்தாபனம்

உங்கள் தேவைகளுக்கேற்ற



மில் ஜவுளிகள்

சில்க் ரகங்கள்

பட்டு, கைத்தறி,

பிரிண்ட் சேலைகள்

ஒருங்கே நிறைந்த

ஒரே விலைக்கடை

MALA (SARL)

78 BOULVARD BARBES
22 RUE LABAT

METRO:– MARCADET – POISSONNIERS
*(Ligne:- Clignan Court – Orleans)*

SPECIALITE:- ALIMENTATION. D'asie et L'inde et Cadeaux

SAREES:– American Georgette, Wooley Georgette,
Banaras Silk, Kanchee Puram Silk etc.

TEL 262-01-23

www.tamilarangam.net


# குழப்பங்களுக்கு காரணம் கருணாநிதியா?

தி.க-வை உடைக்க கருணாநிதி முயற்சி செய்கின்றார் என்ற தி.க.வினர் குற்றச்சாட்டும் —

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருக்கும் கருத்து மோதல்களைப் பயன்படுத்தி, தி.மு.க. அரசியல் ஆதாயம் பெற நினைக்கிறது என்ற கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரத்தின் குற்றச்சாட்டும் வெளிவந்த பிறகு —

கருணாநிதி இந்த இரண்டு குற்றச் சாட்டுக்களையும் மறுத்து உள்ளார். மறுப்பின் இடையே அரசியல் செருகலையும் கருணாநிதி பயன்படுத்தி இருக்கின்றார்.

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பது போல குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. நாளை ரஷ்யாவும் அமெரிக்காவும்கூட இணையாமல் போனதற்கு தி.மு.க. தான் காரணம் என்று சொன்னாலும் சொல்வார்கள் என்று கருணாநிதி தனது மறுப்பில் சொல்லியிருக்கின்றார். மேலோட்டமாகப் பார்த்தால் கருணாநிதி மறுப்புக்கு ஒரு உதாரணத்தைக் கூறியது போலத் தெரிந்தாலும் உண்மையில் அரசியல் ஆழம் பொருந்திய மறுப்பாகும் அது.

தி.க.வில் இருந்து செல்வேந்திரனை நீக்கிய பிறகும் தி.க. கட்சி மேலும் களையெடுப்புகளை செய்யத் தொடங்கியுள்ளது. மாவட்டம்தோறும் நடைபெறும் இந்தக் களையெடுப்புக்கு தி.க. பயன்படுத்தும் அளவுகோல் 'கருணாநிதி ஆதரவாளர்கள்' என்று தி.க.விற்குள் கூறப்படுகிறவர்களே களையெடுப்புக்கு உள்ளாகின்றார்கள்.

டெசோ முதல் பட்டியல் போட்டுச் சொன்னாலும் உண்மைக் காரணம் அவை அல்ல என்ற உண்மையே சமீப நாட்களில்தான் வெளி வந்திருக்கிறது.

தி.க. மற்றும் முஸ்லீம் லீக் கட்சிகள் தி.மு.க. தோழமையில் இருந்து பிரிந்து வெளியே வர வேண்டும் என்பதற்கு திட்டம் போட்டதே அ.தி.மு.கவும் காங்கிரசும்தான் என்பதே அந்த உண்மையாகும்.

தமிழக கட்சிகளுக்குள் இருக்கும் உட்கட்சிக் கருத்து மோதல்களைப் பெரிதுபடுத்தி, அதைப் பிளவாக உருவாக்கி தி.மு.கவை குறிப்பாக கருணாநிதியை அந்தக் குழப்பங்களுக்கு - பிளவுகளுக்குக் காரணமானவர் என்பது போல் தமிழக மக்கள் முன் தெரிய வைக்க மத்திய உளவுத்துறை (காங்கிரஸ் கட்சிக்காக) கடந்த சில மாதங்களாகவே முயன்று வந்தது. பல்வேறு வழிகளில் தொடங்கப்பட்ட அந்த உளவுப் பணி வெற்றிகரமாக செயல்படுவதன் எதிரொலிதான் தி.க.வுக்குள் இருந்த கருத்து மோதல்களும், கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த கருத்து மோதல்களும், முஸ்லீம் லீக்கிற்குள் இருந்த கருத்து மோதல்களும் ஒருமுனைப்படுத்தப்பட்டன. அந்த அந்தக் கட்சிக்குள் கட்சியின் செயல்முறைகளை எதிர்த்து நீண்ட நாட்களாகவே போராடிக் கொண்டிருந்தவர்கள் வெளியே வரும்பொழுது அவர்கள் வெளியேற்றத்திற்கு உள்ள பல காரணங்களை மறைத்து கட்சிகளை விட்டு வெளியே வருகிறவர்கள் கருணாநிதி தூண்டிவிட்டுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதுவும் அரசியல் உளவுத்துறையின் பணிதான்.

கருணாநிதியின் அரசியல் அணுகுமுறைகள்; பேச்சாற்றல், எழுத்தாற்றல் போன்றவற்றால் ஈர்க்கப்பட்டவர்கள் தமிழ் நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளிலும் உண்டு. கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் அ.தி.மு.க.வாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்குள் கருணாநிதியை தனிப்பட்ட முறையில் விரும்பக்கூடியவர்கள் என்ற பிரிவினர் உண்டு. இவர்களின் இந்த மனோபாவம் தி.மு.க. கொள்கைகளை ஏற்கக்கூடிய மனோபாவம் அல்ல. கருணாநிதியின் திறமைகள் மீது கொண்ட தனிப்பட்ட பற்றுதலே சில சமயங்களில் இவர்களைத் தி.மு.க. ஆதரவுப் பிரிவு போலக் காட்டி வந்திருக்கிறது.

இந்த மனோபாவம் சிலரிடம் தீவிரமாக மாறும் பொழுது, அவர்கள் தங்கள் உட்கட்சிக்குள் மோதி தங்கள் கருத்தை நிலை நிறுத்த முடியாத பொழுது அவர்கள் வெளியேற்றப்படுகின்றார்கள் அல்லது வெளியேறி விடுகிறார்கள். அடுத்ததாக இந்த நிலை ஏற்படும் பொழுது அவர்கள் அரசியலில் சிந்திக்கும் இடம் கருணாநிதியின் தலைமையாகத்தான் இருக்கிறது. தி.க.வில் இருந்து வெளியேற்றப்பட்ட செல்வேந்திரன் தி.மு.க.வில் இணைந்ததற்குக் கூட கிட்டத்தட்ட இந்த மனோபாவ அடிப்படையே காரணமாகும்.

இப்படி ஒருபுறம் இருக்க மிக ஆழமான அரசியல் தந்திரம் ஒன்றை எம்.ஜி. ஆர். தனது கட்சிக்குள் சில தினங்களுக்கு முன் செய்திருக்கின்றார்.

பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ராகவானந்தத்தை எம்.ஜி.ஆர். மீண்டும் மூத்த துணைப் பொதுச் செயலாளர் என்று அறிவித்திருக்கிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்த அறிவிப்பு அ.தி.மு.க. கோஷ்டி மோதலை பிரதிபலிப்பது போல்தான் தெரியும். காளிமுத்துவை மூன்றாவது இடத்திற்குத் தள்ள எம்.ஜி.ஆர். செய்த அறிவிப்பு என்று கூட தோன்றலாம். உண்மை அதுவல்ல!

கணவன் குடித்தால் பாதி வீடு எரிந்துகொண்டிருக்கும். மனைவி குடித்தால் முழுவீடும் எரிந்து கொண்டிருக்கும்.

—ரஷ்யப் பழமொழி

நீரில் மூழ்கியவனைப்போல, முட்டாளைப்போல பைத்தியக்காரனைப் போல ஒரு குடிகாரன் ஆகிவிடுறான்.

—ஷேக்ஸ்பியர்

எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் கூட்டணிக் கட்சிகளின் தலைமையை அ.தி.மு.க.வின் பக்கமாக இழுக்க திட்டம் போட்டிருக்கின்றார். அதற்கு தன் சார்பாக பேச்சு நடத்த சரியான நபர் தேவை என்று நினைத்தே மூத்த துணைப் பொதுச் செயலாளர் பதவியை உருவாக்கினார் என்பதே உண்மையாகும். அப்படியே இருந்தாலும் 'ராகவானந்தத்தைத் தவிர' வேறு திறமைசாலி எம்.ஜி.ஆருக்குக் கிடைக்கவில்லையா என்று வாசகர்கள் கேட்க நினைக்கலாம்.


தி.மு.க. கூட்டாளி கட்சிகளில் முக்கியமானவை இரண்டுதான். ஒன்று தி.க. மற்றொன்று முஸ்லீம் லீக். முஸ்லீம் லீக் கட்சிக்குள் அப்துஸ் சமது தலைமை காங்கிரஸ் ஆதரவு பிரிவு என்பது கருணாநிதிக்கு தெரிந்த மாதிரி எம்.ஜி. ஆருக்கும் தெரியும். லத்தீப் அணியோ ஆரம்பம் முதலே கருணாநிதியின் பால் பற்றுக் கொண்ட அணியாகும்.

முஸ்லீம் லீக் கட்சிக்குள் 84ம் ஆண்டு தேர்தலிலேயே வெடிப்புத் தொடங்கி விட்டது. அப்துஸ் சமது 84 பொதுத் தேர்தலில் எம்.பி. பதவிக்குப் போட்டியிட்டு டெல்லி செல்லவே நினைத்தார். ஆனால் சமது டெல்லிக்குச் சென்றால் காங்கிரஸ் வலையில் விழுந்து விடுவார் என்பதனால் அவருக்கு எம்.பி. சீட் கொடுக்காமல், திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் சூழ்நிலையை கலைஞர் உருவாக்கிவிட்டார். இப்படி ஒரு மனப்பொருமல் சமதுக்கு உண்டு என்பதை காங்கிரஸ் தலைமை புரிந்து கொண்டு சில சலுகைகளை அளித்து சமதைப் பயன்படுத்திக் கொண்டு விட்டது. தமிழ்நாடு எம்.ஜி. ஆர். அரசும், அப்துஸ் சமது தி.மு.க. வில் இருந்துவெளிவந்தால் மட்டும் போதும் அ.தி.மு.க.வில் வந்து சேரா விட்டாலும் பரவாயில்லை, என்று நினைத்து மேலும் சில சலுகைகளை அளித்ததன் விளைவு தி.மு.க.வையும் மீறி முஸ்லீம் லீக் கட்சியின் இரண்டு வாக்குகளும் ஜனாதிபதி தேர்தலில் வெங்கட்ராமனுக்கு, கிடைத்ததற்கான காரணமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக, தி.க. மட்டுமே அ.தி.மு.க.வின் அணிக்கு வரவேண்டும் என்று எம்.ஜி.ஆர். நினைத்தார். அப்படி வந்தால் பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். என்று திராவிட பாரம்பரியம் வரிசை



அமையும். கருணாநிதிக்கு அந்தப் பெருமை போகக் கூடாது என்ற தனது ஆசையும் நிறைவேறி விட வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர். காங்கிரஸையும். ஈழத்துப் பிரபாகரனையும் நீண்ட நாளாக பயன்படுத்தினார். இப்பொழுது ராகவானந்தத்தைப் பயன்படுத்தி பேச்சு வார்த்தை நடத்தப் போகின்றார். தி.க. வீரமணிக்கும், ராகவானந்தத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை அறிந்தே, எம்.ஜி.ஆர். மூத்த துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பை அறிவித்தார்.

ஜனதா கட்சியின் தலைவரான செழியன் கடந்த ஒரு மாத காலமாக டெல்லிலேயே தங்கியிருக்கின்றார், தமிழக ஜனதா கட்சியின் பொதுக்குழு, செயற்குழு திண்டுக்கல்லில் கூடி அ.தி.மு.க., திமு.க. கூட்டு வைத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு எடுத்தபிறகு டெல்லி சென்ற செழியன் ஜனதாவின் தேசியத் தலைமையை எப்படியாவது சரிகட்டி தமிழக ஜனதா முடிவை மீறி அ.தி.மு.க.வுடன் தமிழ்நாட்டில் கூட்டு வைத்துக் கொள்ள சம்மதிக்க வைக்கவே அங்கு தங்கியிருக்கிறார் என்ற குற்றச்சாட்டும் மறுக்ககூடியது அல்ல. இதற்கு நெடுஞ்செழியன் வற்புறுத்தலும் காரணமாகும்.

ஜனதா கட்சி தனியே நிற்க வேண்டும் என்று முடிவெடுத்த பிறகு ஜனதா பொதுச் செயலாளர் கலிவரதன் தனது ஆதரவாளர்கள் சிலரை மாவட்டம் தோறும் அனுப்பி பொதுக்குழு, செயற்குழு முடிவுகளுக்கு

கொண்டு வருகிறது. இதனால் ஜனதாவுக்குள்ளும் பிளவு ஏற்படலாம். அப்படி பிளவு ஏற்பட்டால் அன்றும் கருணாநிதி பெயர்தான் வெளிவரும்!

இதே நிலைமை அ.தி.மு.க.விற்குள்ளும் இருக்கிறது. வீரப்பன் கோஷ்டியை கருணாநிதி ஆதரிப்பார் என்ற பிரச்சாரம் முடுக்கி விடப்படுகிறது.

முஸ்லீம் லீக், கம்யூனிஸ்ட், தி.க. என்று கட்சிகளை இணைத்து டெல்லிக்கு முன் தன்னை பலசாலியாக காட்ட எம்.ஜி.ஆர். நினைக்கும் பொழுது அ.தி.மு.க.வையே உடைக்க காங்கிரஸ் திட்டம் வேறு செயல்பட தொடங்கியுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளும் தி.மு.க., அ.தி.மு.க. இந்த இரண்டில் எந்தக் கட்சியை ஆதரிப்பதுஎன்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. தி.மு.க.வை ஆதரிக்கும் காங்கிரஸ் கோஷ்டியின் கை ஓங்கிவிடாமல் இருக்க எம்.ஜி.ஆர். பல்வேறு முறைகளை கையாண்டு வருகின்றார்.

மறுபக்கத்தில் தி.மு.க.வை தனிமைப்படுத்தவும், கருணாநிதியை குழப்பவாதியாகக் காட்டவும் காங்கிரஸ் முயற்சிகள் நடத்துகிறது. இப்படி ஒரு பிரச்சாரத்தை இன்றே செய்து வைத்தால் நாளை தனிமைப்பட்டு போய் கருணாநிதி கூட காங்கிரஸ் ஆதரவை நாடிவரலாம். அப்படி கருணாநிதியே தேடி வந்து விட்டால் எம்.ஜி.ஆர். உறவை விட மேலானதாக தி.மு.க. உறவு இருக்கும் என்றும் ரகசியமாக காங்கிரஸ் திட்டம் போட்டுள்ளது.

இந்த திட்டங்கள் வெற்றிபெற பல்வேறு விதமான சக்திகள், பத்திரிகைகள் தமிழ் நாட்டில் பயன்படுத்தபடுகின்றன. மறைக்கப்பட்டுள்ளமேலும் பல உண்மைகள் வெளிவரும் பொழுது தான் உண்மை குழப்பவாதிகள் யாரென்று தமிழக மக்களுக்கு விளங்கும்.

* ஒரு மனிதன் மதுவைக் குடிக்கிறான். அதன் பிறகு மது மதுவைக் குடிக்கிறது. அதன் பிறகு மது மனிதனைக் குடித்துவிடுகிறது.
. ஜப்பானியப் பழமொழி

*கடுகளவும் உண்மையில்லாத பழமொழியே இல்லை.
....ரஷ்யா

*அறியாமை அடிமைத்தனத்தைச் சம்பாதிக்கிறது.
...இத்தாலி

www.tamilarangam.net

★ எங்களிடம் பலவிதமான ★

★ தங்க நகைகள்

★ அழகிய சுவர், கைக்கடிகாரங்கள்

★ பயனுள்ள கால்குலேட்டர்கள்

★ கவர்ச்சிகரமான எவர்சில்வர் பாத்திரங்கள்

★ பளபளக்கும் இமிடேஷன் நகைகள்

★ பலதரப்பட்ட சரங்கள், ரெடிமேட் ஆடைகள்

★ எழிலூட்டும் பட்டு நைலக்ஸ் சேலைகள்

★ அழகூட்டும் அழகு சாதனங்கள்

★ மெருகூட்டும் அன்பளிப்புப் பொருட்கள்

மற்றும் பல

★ குறைந்த விலையில் கிடைக்கும் ★

ஒரு முறை வருவீர்! உணர்வீர்!

# GOLDEN STAR

**Rue Du Faubourg Saint Denis**
**75010 PARIS**
**Tel: 42392644**

*Metro: Gare Du Nord - La Chapelle*

www.tamilarangam.net

# கம்பரசம்

## C.N. அண்ணாதுரை M.A

### டோஸ் நெ. 1 தொடர்

எப்படி இருக்கிறது தோழர்களே! அயோத்தி மக்களின் அறிவு? ஓடத்தில் உடனிருக்கும் மாதரின் ஆடை நனைந்து மறைவிடம் வெளியே வந்து சோகம் நீங்கினராம்! என்ன மாண்பு! எவ்வளவு அறிவு! எத்தகைய யோக்கியர்களப்பா இவர்கள் !!

ஓடத்திலே சென்றவர் தசரதன் திருமனைவியர், அவர்தம் பாங்கியர்! ஆடவரோ பரதன், அவன் படையினர்! அரச குடும்பம் ஓடமேறிச் சென்றதன் வர்ணனை! அதிலே இந்த ஆபாச ரசம்! அதிலும் எதற்குச் சென்றனர்? கானகத்துக் காட்சி கண்டு களிக்கவா! வேட்டையாடி விருந்து சமைக்கவா? அல்ல, அல்ல! வேதனையால் தாக்குண்டு, அதிலும் யாரோ ஆடலழிகள், பொது மகளிர் களியாட்டத்துக்காக மதுவுண்டு மயங்கிச் சென்ற சமயமா, கவி சித்தரிப்பது? மறைவிடம் வெளித் தெரியக் கண்டு மனமகிழ்வு கொண்ட மதுகை மைந்தர், ஓய்வுக்கும் உல்லாசத்திற்கும் சரச சல்லாபிகளுடன் ஓடமேறிச் சென்ற காட்சியையா கவி கூறப போந்தார்! இல்லை! இல்லை! விம்மியபடி செல்கின்றனர். அயோத்தியிலே, மன்னன் மாண்டான்! ஆரண்யத்திலே இராமன் இருந்தான்! பரதன் செல்கிறான், படையுடன், தாயமார்களுடன அண்ணனை அயோத்திக்கு வரச்சொல்ல! அதற்காக குகன், நாவாய்கள் தயாரிக்க, அதிலே சென்றனர் பட்டமகிஷிகள், பாங்கியர், பரதன், அவன் பிரதானியர், படையினர்! அந்த நேரத்திலே இந்த வர்ணனை! படகு செலுத்தியதை வாணிக்க, பட்டாடை நனைந்தது, பரந்த மறைவிடம் பளிச்செனவெளித் தெரிந்தது; சோகத்திலிருந்த வீரர், அக்காட்சியினைச் சுவைத்தனர் என்று கவி வர்ணிக்கிறார். இதைப் படித்தால், நாம் என்ன எண்ணி ஏங்குவது? இவ்வளவு காமாந்தக்காரர்களின் கதையைப் புண்ணிய சரிதம் என்று மக்கள் படிக்கின்றனரே என்று சோகிப்பதா? பகவான் பிறந்த இடத்திலே வாழ்ந்த மக்கள் இவ்வளவு அநாகரிக புடையவர்களாக இருந்தார்களே என்பதை எண்ணித் துக்கிப்பதா? இத்தகைய ஆபாசக் கூட்டத்தைக் கவி ... ... என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட சுவடியை சுமந்து தீர வேண்டும் என்று கடுஞ் சொல் புகன்று வாழும் பேர்வழிகள் இன்றும் உள்ளனரே என்பதை நினைத்து நெஞ்சம் புண்ணாவதா? நீங்களே கூறுங்கள்! இராமாயணத்தின் சுவையும், இராம அவதார மேன்மையும் இந்தச் செய்யுள் இல்லாவிட்டால், மக்களுக்கு விளங்காது என்று கருதிக் கம்பர் இதனைத் தீட்டினாரா? தமது கவித் திறமையை விளக்க, இயற்கையை வர்ணித்தால் போதாது; மறைவிட ஒளியையும் வர்ணித்தே தீர வேண்டும் என்று எண்ணி இக்கவிதையை இயற்றினாரா? கடவுளின் கதையிலே காமரசம் இருக்க வேண்டுமா? அதிலும் இத்தகைய ஆபாசம் நெளியும் காமரசமா இருக்க வேண்டும்? கலா ரசிகர்களே! இலக்கியச் சுவையிலே இலயிக்கும் கவிதா உள்ளம் படைத்த கண்ணியர்களே! கலைக்காகச் சர்வபரித் தியாகம் புரிய முன்வந்துள்ள மதுகை மைந்தர்காள்! மறை விடத்தின் மாண்பு விளக்கமாம், இக்கவிதை தருவது போன்ற காமரசம், மக்கட்குத் தேவைதானா? நெஞ்சிலே கைவைத்துப் பதில் கூறுங்கள், நேரப் போக்குக்கோ, நரம்பு போக்குக்கோ, பஞ்சணைப் பேச்சுக்கோ, பாவையர் கண்வீச்சுக்கோ, கண்டதால் உண்டான மன நெகிழ்ச்சிக்கோ, காமரசக் கவிதை தேவையாக இருக்கலாம். அதுவும், தொந்தி சரிய மயிரே வெளிர நிறை தந்தமசைய உடலே'' கொண்ட பருவத்தினருக்குக் கடவுள் திரு அவதாரக் கதைக்கு, இத்தகைய செய்யுள் தேவையா? சற்றே பதில் கூறும்?

இவ்விதமான காமச்சுவையை உண்ட மயக்கமே, பலரை கம்ப இராமாயணத்தைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்ற மதுகை மைந்தராக்கிவிட்டது என்று எண்ணுகிறேன்.

டோஸ் 2ன் தொடர் 35-ம் பக்கம்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு

நண்பர்கள் முறையான காரணமின்றி வருத்தம் ஏற்பட்டு இருந்தால், பலராக இருப்பினும் சரி, அது குறித்து நமக்கு சிறிதும் அக்கறை இல்லை.

ஆனால் S.N.C.R அறிவியல் விளம்பர மையத்தில் பங்கு சிலருக்கு வருத்தம் ஏற்பட்டு, அது நியாயமான காரணமாக இருந்தமையால், அது குறித்து வெட்கம் கலந்த வருத்தம் மேலிடுகிறது. எனவே பொறுத்தருளும்படி சம்பந்தப்பட்டவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பன்
லெ வாண்டீபி
பதிப்பு உ பொறுப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன்...

அன்பார்ந்த அருமைத் தமிழன்பர்களுக்கு,

மலேய உலகத்தமிழ்ப்பண்பாட்டுக் கழகத் தலைவரான நண்பர் R.N வீரப்பன் அவர்களின் வேண்டுகோளின் படி விழா அழைப்பிதழ் நண்பனில் வெளியிடப்பட்டது.

அதைப் பார்த்து ஒரு நண்பர் மலேய விழாவில் கலந்து கொள்ளும் தனது ஆவலையும் தெரிவித்தார்.

செல்ல விரும்பும் அன்பர்களின் வசதிக்காகவே முழுவிவரமும் ஏற்கனவே கேட்டிருந்தேன். அவ்விபரங்களை இம்மாத முடிவுக்குள் வெளியிட வேண்டும் என்பது தலைவரின் அன்புக்கட்டளை.

அதற்கேற்ப, இவ்விசேட மலரில் மலேசிய விழாவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இன்னும் சொல்ல போனால் அதற்காகவே வெளியிடப்படுகிறது.

அன்பார்ந்த வியாபார நண்பர்களுக்கு,

... சித்ரா என்ற புதிய இதழை உங்களில் சிலர் விற்கிறீர்கள். தமிழ்ப்பத்திரிக்கைதான். ஆனால் தரம் கெட்ட மலர் அது. அதைப்படித்து தமிழன் தனது உயர் பண்பாட்டை கெடுத்துக் கொள்ள நீங்கள் காரணமாக வேண்டாம். வியாபார ரீதியிலும் அதனால் நீங்கள் பெரிய இலாபம் அடைய போவதில்லை.

உம்மைப் போன்ற எப்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியத்துவம் அளித்து கொள்கைப்பகுதி ஒரு பக்கம் சுய இன்பத்தின் வேகங்களை கூறி மற்ற பக்கங்களில் அதைத் தூண்டும் வகையான அருவருப்பான அசிங்கமான பல சங்கதிகளை, அறிவுக்கு பொருந்தாத சம்பவங்களைக் கூறி தங்களது தீய அரிப்பை தீர்த்துக் கொள்ளும் இந்த குட்டிச் சாத்தான்களுக்கு துணை போக வேண்டாம்.

பழக்கும் தமிழன் பாதிக்கப்பட்டு பின்னர் வெளியிடும் பெருமூச்சிற்குக் காரணமாக வேண்டாம்.

நமக்கும் தாய் உண்டு. சகோதரிகள் உண்டு. ஏன் மகளும் வர வாய்ப்புண்டு. அம்மகளுக்கு ஆண்மையுள்ள மணமகன் வேண்டும் என்ற விருப்பமும் உண்டு. அப்படி இருக்க ஆண்மையைக் குறைக்கும் அழிவு வேலைகளுக்கு துணை போகலாமா?

சற்று சிந்திப்பீர்! விட்டு விடுவீர்! மறத் தமிழனின் வீர உணர்வைக் குறைக்கும் மதியீனச் செயலை.

நம்மில் சிலர் இருக்கிறார்கள். சேவை நோக்குடன் உயர் கல்விப்பணியை போற்றத்தக்க விதத்தில் ஆற்றுகின்றனர். அதில் உங்கள் கவனத்தைத் திருப்பி, பிறர்க்கும் நமக்கும் பண்பாட்டிற்கும் பயன்தரும் கண்ணியமான வருவாயை பெறலாமே!

வாசக நண்பர்களே! அப்படி என்ன அம்மலரில் என்று விளக்கம் கேட்க வேண்டாம். மலம் சாப்பிடுகிறேன் என்று சொன்னாலே காரியத்தின் கேவலம் புரியும். இப்படி அப்படி பிசைந்து குழைத்து என்ற விளக்கம் தேவையில்லை.

www.tamilarangam.net

# திருமணம் மற்றும் இறப்பிறப்பறிவிப்பு

எனது நண்பர் அப்துல் லதீப் உடைய திருமணம் புத்தாக மதம் மாறி வியட்நாமிய நங்கை சலீமா உடன் Neuilly Plaisance விழா மண்டபத்தில் 4-7-87 ல் நடைபெற்றது. மண மக்கள் நீடுழி வாழ வாழ்த்து கின்றேன்.

அபு அப்துல்லாஹ்
oissel

எனது மதிப்பிற்கும் அன் பிற்கும் உரிய சகோதரர் பாவா மியான் ரீசா அவர்களின் அருமை மகனுக்கும் புத்தாக மதம் மாறிய முகமது முஸ்தபா என்று பெயர் பெற்ற பிரெஞ்சுக் காரருக்கும் எளிய முறையில் 5-7-87 ல் Francoville மண மகள் வீட்டில் நடைபெற்ற திருமணத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றியும், மண மக்களுக்கு வாழ்த்தையும் தெரிவிக்கிறேன்.

அப்துல் கபூர் பாவா
மியான், Marcoville.

நீடூர் மாஹீம் தஸ்தகீர் அவர்களின் அருமை இளைய குமாரன் செய்யித் இத்ரீஸுக்கும் ஜனாப் அப்துல் ஜப்பார் அவர்களின் அருமை மகளுக்கும் 11-7-87 ல் Villers-lebel உணவு விடுதியில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. மணமக்கள் பதினாறு மங்களகர மான செல்வங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ வாழ்த்துகிறேன்.

அன்புடன் நண்பன்.
முகம்மது சலாஹுத்தீன்.

## மணமக்கள் தேவை

26 வயதுள்ள மண மகனுக்கு தமிழ்பேசும் பிரெஞ்சு மணமகள் தேவை.

26 வயதுள்ள இந்தோ

www.tamilarangam.net

வியட்நாமிய மங்கைக்கு வியட்நாம் பேசும் மணமகன் தேவை.

தூரமான ஊரில் வாழும் கண்ணியமான முஸ்லிம் குடும்பத்திற்கு தமிழ், வியட்நாம் பேசும் பிரான்சில் இருப்பம் உள்ள மணமகள் தேவை.

சிறந்த வேலை, பிரெஞ்சு தேசியமுடைய 27 வயதுள்ள ஒருக்கு வியட்நாம் பேசும் முஸ்லிம் மணமகள் தேவை.

30 வயதுடைய ஆங்கிலம் வியட்நாம் பேசும் கத்தோலிக்க பெக்கு மணமகன் தேவை. மதம் பொருட்டல்ல.

அனைத்து Demenagement வேலைக்கு 42 80 40 28 பிரெஞ்சு, ஆங்கிலத்தில் மட்டும் பேசுக.

திருமண மணவறை, வாழை மண்டப ஏற்பாடு, அலங்காரம், பூமாலை செய்தல், உணவு சமைத்தல், ஆகியவைகளுக்கு

48 39 39 22.

சுற்றுலா பஸ் ஏற்பாட்டிற்கு பாரீசை வலம் வருதல் 900 பிராங்கிலிருந்து பஸ் உண்டு. குறைந்த செலவில் தூர சுற்றுலாக்களுக்கு 30 பேர்கள் கொண்ட இதுவே சிறப்பு.

47 06 72 00

21H க்கு பின் போன் செய்க. சனி, ஞாயிறு காலை வேளைகளில்.

போட்டோ காப்பி அடித்து தர

I உயர்தரம்

100 காபிக்கு 45 F
200 " 80 F
300 " 105 F

II நடுத்தரம்

100 காப்பிக்கு 40 F

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

300 காப்பிக்கு 90 F

இவைகளை விலையில் பெறலாம்.

ஒரே மாடலாக அல்லது பல மாடலாக திருப்பினும் சரி.

III நிறைந்த விலை வகை 10 நாள் தவணை தேவை.

300 காப்பிக்கு 56F50
500 ,, 95F00
1000 ,, 180F00
2000 ,, 330F00

கலர் தாள்களுக்கு 22% அதிகவிலை. தேவைக்கு 47 06.72.00. 21H க்கு முன்.

சுருக்கமான திருமண, மரண அறிவிப்பு இலவசம். பிறப்பு, திருமண வாழ்த்து மற்றவைகளுக்கு வரிக்கு 4 பிராங். தொலைபேசி இலக்கம், முகவரி போடப்படாதவைகளுக்கு நண்பன் முகவரிக்கு எழுதவேண்டும். ரகசியங்கள் பாது காக்கப்படும்.

இலங்கை, இந்திய செய்திகள் அறியத்தக்கதாக உள்ளது. ஆனால் பிரான்சின் அரசியல்நிலை, அமைச்சர் களின் திட்டம், ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வு, LYON ல் நடைபெறும் வழக்கை இந்தச் செய்திகள் அதிகளவில் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உதய குமார்

ARGENT

பிரேம் நசீர் வரை அரசியலுக்கு இழுத்துவிட்ட காங்கிரஸ், தற்போது ரஜினிகாந்த் பக்கம் தன் பார்வையைத் திருப்பி இருக்கிறது.

அவருக்கு வலை வீசியிருப்பவர்கள் காங்கிரஸ் இளைஞர் பிரிவினரும், பிரபலமாகி வரும் ஒரு நடிகையின் ரசிகர் மன்றத்தினரும்!

முதலில் ரசிகர்களாக நுழையும் இவர்கள், ரசிகர் மன்றத்தின் தலைமைகளைக் கைப்பற்றத் திட்டமிட்டிருக்கின்றனர்! முதலில் இவர்கள் பிடிக்கப் போவது சென்னை மாவட்டத்தை!

இவர்களின் ஊடுருவலால் ரஜினிகாந்த் ரசிகர் மன்றத்தின் தற்போதைய தலைவர்கள் கலக்கமடைந்திருக்கிறார்கள்!

ரஜினி வலையில் அகப்படுவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டதும் கேட்டதும்

ஜனாதிபதி தேர்தல் ஜுலை 13ந்தேதி நடைபெற்றது. தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை கோட்டையில் ஓட்டுப்போட்டார்கள். முதலில் சபாநாயகர் பாண்டியன் ஓட்டுப்போட்டார் கமிஷனர் தேவாரம் கேட் நம்பர் ஒன்னுக்கு எதிரே உள்ள ஆலமரத்தடியில் இருந்து கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அவரோடு துணைக்கமிஷனர் காளிமுத்து, ரஞ்சித்சிங் ஆகியோர் இருந்தனர். அச்சமயம் ஐ.ஜி. ஸ்ரீபால் காரில் வந்து இறங்கினார். போலீஸ் அதிகாரிகளின் வாகனங்கள் தவிர இதர எம்.எல்.ஏக்கள் மந்திரிகளின் கார்கள் கூட அந்த இடத்தில் நிற்க அனுமதிக்கப்படவில்லை. அப்போது 'சர்' என்று ஒரு கண்டசா கார் (டி.எம்.ஜி. 9999) வந்து ஐ.ஜி. ஸ்ரீபால் கார் [டி.சி.வி. 886] அருகே நின்றது. அக்காரிலிருந்து அட்டகாசமாய்கொ.ப.செ. ஜெயலலிதா இறங்கினார்.

கேட் நம்பர் ஒன்று வரண்டாவில் அமைச்சர்கள் பொன்னையன், ப.உ.ச. போன்றோர் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஆர்.எம்.வீரப்பன் ஓட்டுப் போட்டு விட்டு வந்தார். அவருடன் எம்.எல்.ஏக்கள் கே.பி. ராமலிங்கம், வேலு, மங்களூர் தங்கராசு ஆகியோரும் வந்தனர். வரண்டாவில் நிற்கும்பொன்னையனைப் பார்த்ததும் ஆர்.எம்.வி. அவர் கையைப்பற்றி ஓரமாய் அழைத்துக் கொண்டுபோய் ஏதோ பேசினார். உடனே ஒரு பத்திரிகை போட்டா கிராபர் அதைக் 'கிளிக்' செய்தார். உடனே ஆர்.எம்.வி பதறியடித்துக்கொண்டு, 'எந்தப்பத்திரிகை! எந்தப் பத்திரிகை!' என்று கேட்டார். நிருபர் பத்திரிகையின் பெயரைச் சொன்னதும், அமைச்சர் பொன்னையன் 'யப்பா, இப்ப எடுத்த படத்தை பத்திரிகையிலே போட்டுடாதே!' என்று எச்சரித்தார். அச்சமயம் எம.ஜி.ஆர். கார், கேட் நம்பர் 3ன்வாசலில் நின்றது. உடனே ஆங்காங்கு நின்றவர்கள் பாபாத்தார்கள். எம்.ஜி.ஆர் சிரித்துக் கொண்டே அங்கிருந்தோர் தந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டு வந்தவர், ஆர்.எம்.வியை எதிர்கொண்டதும் அவர் கையைப்பற்றித் தன்னோடு வரும்படி அழைத்தார். ஆர்.எம்.வி கூச்சத்தோடு, 'நான் ஓட்டுப்போட்டுட்டேன்... உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்,' என்று பணிவாகச் சொன்னார். எம்.ஜி.ஆர் அவரைப்பார்த்து ஒரு மர்மப் புன்னகை செய்தார்.

ஓட்டுப் போடும் ஹாலில் எம்.ஜி.ஆர் நுழையும் சமயம எதிரே தி.மு.க. எம்.பி. டி.ஆர் பாலு வந்தார். எதிரே எம்.ஜி.ஆர் வருவதைப் பார்த்ததும் பாலு கொஞ்சம் வழியிலிருந்து ஓரம் கட்டினார். அதைப் பார்த்த எம்.ஜி.ஆர் டி.ஆர் பாலுவைப் பார்த்து ஒருபுன்சிரிப்பு...!

இறுதியில் .ஓட்டுப்போட்டுவிட்டு வந்தார் எம்.ஜி.ஆர். அவர் காரில் ஏறி இடது 'பக்கமாக உட்கார்ந்து கொண்டு அந்தப்பக்கத்திலுள்ள கண்ணாடியை அவரே கீழே இறக்கிக் கொண்டார். வெளியே நின்ற முன்னாள் மந்திரி விஜயலட்சுமி, காங். எம்.எல்.ஏ பொன்னம்மாள் ஆகியோர் வணக்கம் சொன்னதும் காரை வேகம் குறைக்கச் சொல்லி அவர்களை நலம் விசாரித்தார் எம்.ஜி.ஆர். பிறகு கார் பறந்தது.

எம்.ஜி.ஆர். போனபிறகு தி.மு.க. எம்.பி. டி.ஆர். பாலு ஓட்டுப்போட வரிசையாய் நின்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை நோட்டம் விட்டபடியே, இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தார். சில அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அவரைப் பார்த்து ரகசியமாய் புன்னகை செய்தார்கள்.

கிளியோபாட்ரா, பூனம், சைனா
சில்க் போன்ற ஜப்பானிய தயாரிப்பு
சேலைகளும், பல வகைப்பட்ட சேலை-
களும் குறிப்பாக பனரஸ் பட்டு
சேலைகளும் குறைந்த விலையில் வாங்க

BOMBAY BAZAAR

RUE DU FAUBOURG ST, DENIS

75010 PARIS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம்.ஜி.ஆர் வீட்டில்

## மந்திரிக்கு அவமானம்!

★ வரும் வாரங்களில் மத்திய மந்திரி சபையில் பெருத்த மாற்றங்களை ராஜீவ் காந்தி அறிவிக்கப் போகின்றார். அந்த அறிவிப்பின் போது தமிழ் நாட்டில் இருந்து சென்ற ப. சிதம்பரம் பதவி பறிக்கப்பட்டுவிடும் என்கிறார்கள்.

சமீபகாலமாக இலங்கை பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் ப. சிதம்பரத்தை மத்திய அரசு முன்னிலைப் படுத்தவே இல்லை. ப. சிதம்பரத்தின் மீது அவரது குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமானவர் ராஜீவ் காந்தியிடம் நேரிடையாகக் கூறிய புகார் ஒன்றின் காரணமாகவே ப. சிதம்பரம் புகழ் குறைந்து விட்டது என்கிறார்கள்.

ப. சிதம்பரத்திற்குப் பதிலாக தமிழ் நாட்டு சார்பாக வாழப்பாடி ராமமூர்த்தி பதவி ஏற்கலாம் என்று டெல்லி வட்டாரங்கள் சொல்கின்றன.

**ப**ண்ருட்டி ராமச்சந்திரன் ஜூலை ஆரம்பத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள குற்றாலம் சென்றார். அவரை வரவேற்க அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் கூட வரவில்லை. தொழிற்சங்கத்தின் சார்பில் அண்ணா தொழிற் சங்கப் பேரவை துணைத் தலைவர் நம்பிராஜன் மட்டுமே வந்திருந்தார் என்கிறார்கள். பண்டுட்டியாருக்கு மாவட்டங்களில் கடுமையான எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்பது ஆர்.எம்.வீ. கட்டளையாம்!

எம்.ஜி.ஆர். கட்டளையோ வேறுவிதமாக இருக்கிறது. சமீபத்தில் ஆர்.எம்.வீ. திருநெல்வேலி சென்றபொழுது எந்த அரசு அதிகாரியும் ஆர்.எம்.வீயை சந்திக்கவே இல்லையாம். சில அதிகாரிகளை வரச்சொல்லி ஆர்.எம்.வீ. பேசியபொழுது அந்த அதிகாரிகளே ஆர்.எம்.வீயிடம் முதல்வர் உத்தரவைச் சொன்னார்கள் என்கிறார்கள்.

★ அமைச்சர் திருநாவுக்கரசு ராமாபுரம் தோட்டத்திற்குப் போயிருக்கின்றார். எம்.ஜி.ஆரை சந்திக்க வருகின்றவர்கள் வரிசையாக தோட்டத்தில் அமர்ந்திருப்பார்களாம். அவர்களை ஒருவர் ஒருவராக அழைத்து பெயர் எழுதிக் கொள்வது தங்கவேலு என்ற பி.ஏ. வின் பணியாம். தங்கவேலு வரிசையில் இருந்த திருநாவுக்கரசை நோக்கி ஒரு விரலை அசைத்து இங்கே வா ' என்பது போல் அழைத்திருக்கிறார்

இதனால் திருநாவுக்கரசு மிகுந்த ஆத்திரம் அடைந்து தங்கவேலுவுடன் பெரிய சண்டையே போட்டிருக்கின்றார். மந்திரியின் உரத்த குரலைக்கேட்டு வெளியே வந்த சீனியர் பி.ஏ. பரமசிவம் மந்திரியை சமாதானப்படுத்தி தங்கவேலுவை கண்டித்திருக்கின்றார். இல்லாவிட்டால் பெரியரகளையே ஏற்பட்டிருக்கும் என்கிறார்கள் நேரில் சம்பவத்தை பார்த்த வாரியத் தலைவர்கள்!.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராஜீவின் ஆறுதல்

ஜனாதிபதி தேர்தலில் ஆர். வெங்கட்ராமன், 76 வெற்றி பெற்றார்.

இந்தியாவின் எட்டாம் ஜனாதிபதியாகும் இவர் வெற்றி ராஜீவிற்கு பெரும் ஆறுதல் தரக் கூடிய ஒன்று.

ஏனென்றால் அண்மையாக ஆந்திர மாநில சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் நன்றாக அடி வாங்கிய சமயம்.

3 மந்திரிகளை ராஜீவ் மந்திரிசபையிலிருந்து நீக்கியும் இருந்த நேரம்.

பல்வேறு அதிருப்தி அலைகள் கொந்தளிப்பில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கட்சிக்கு கட்டுப்பட்டு ஓட்டுப்போடுவார்களா என்ற அச்சம் இருந்தது உண்மை.

இவ் வெற்றி அவதானிகள் கணிக்கப்பட்டபடியே அமைந்ததுவும் எதிர்பாராத அளவில் அதிகமான வாக்குகள் பெற்று வென்றது எதிர்பாராத ஒன்று.

மொத்தம் 7,40,148 வாக்குகள் இவருக்கும் மற்ற போட்டியாளர்களான கிருஷ்ணா ஐயருக்கு 2,81,550ம் சின்னாவிற்கு 2,223 ஓட்டுக்களும் கிடைத்தன.

பாரிஸ்டர் படித்து தொழிற் சங்க இயக்கங்களில் ஈடுபட்ட வெங்கட் 1930-ல் அரசியலில் நுழைந்தார்.

தமிழக தொழில் மந்திரியாகவும் இந்திரா அமைச்சரவையில் நிதி, பாதுகாப்பு அமைச்சராகவும், ராஜீவ் காலத்தில் 3 ஆண்டுகள் துணை ஜனாதிபதியாகவும் இருந்தார்.

ராஜீவின் தலைமையில் காங்கிரஸ் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் வைத்துள்ள நம்பிக்கையை இத்தேர்தல் முடிவு வெளிப்படுத்துகிறது. அந்த வகையில் இது பெரும் ஆறுதல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சகல விதமான இந்திய வியட்நாமிய
மளிகை சாமான்களும், காய்கறி வகை
களும், சுவை மிக்க மீன் இறால் வகைகள்
மற்றும் ஆசிய கலை கைப்பணிப் பொருட்
களும் குறைந்த விலையில் கிடைக்குமிடம்

# ROSALIE

15, RUE LAGRANGE , PARIS.5ஈ

(M) METRO: MAUBERT MUTUALITE



## இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

தேர்ச்சிபெற்ற சமையற்காரர்களைக்கொண்டு பசிக்காகவும், ருசிக்காகவும், சாப்பிடும் விதத்தில் நாவிற்கினிய கோழி, இறைச்சி பிரியாணிகள் மணமும் சுவையும் உள்ளது. குணமிக்க கறி வகைகள் புரு, வாத்து, மீன் புராட்டா இன்னும் பல வகையான சிந்தை மகிழும் சிறந்த உணவுகளுக்குச் சிறந்த இடம்

ஆர்டர் கொடுத்தால் உள்ளம் மகிழும் வகையில் அருமையாக அற்புதமாக சப்ளை செய்ய என்றென்றும் காத்திருப்பது.

TEL: 43.66.94.10

# RESTAURANT INDIEN

(M) MÉNILMONTANT. 18, RUE DE MENILMONTANT.
PARIS. 75020.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேண்டுகோள்

தொடர்பு:

## தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

(பேராக் மாநில - கிளை)

மாநாட்டுக் கருப்பொருள்:

உலகத் தமிழர் தாய்மொழி

மாநாட்டு நாட்கள்: 29,30,31-8 1987
கோலாலம்பூர் - மலேசியா.

அன்புடையீர், வணக்கம், வாழுக!

1974 - ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அமைந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதல் மாநாடு 1977ல் சென்னையிலும், 2வது மாநாடு 1980ல் மொரிசியசிலும், 3வது மாநாடு 1985ல் சேலத்திலும் சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

இவ்வியக்கத்திற்கு 40 நாடுகளில் கிளைகளும் தொடர்பாளர்களும் உண்டு. கோலாலம்பூரில் உலகளாவிய தமிழ் மாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

மாநாட்டு மகுடமாக அமைந்து சிறக்கக்கூடிய கருவூலமாக சிறப்புமலர் வெளியிடப்படவுள்ளது.

## இயக்கக் குறிக்கோள்கள்:-

1. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட உலகத் தமிழர்களை அந்தந்த நாட்டு குடிமக்களாக, ஆங்காங்கே வாழும் ... ஒற்றுமைப்படுத்துவது

2. தாய்மொழியை அந்தந்த நாடுகளில் பேச படிக்க எழுத ஊக்க மூட்டுவது, இறந்த தாய்மொழித் தமிழைப் பாதுகாத்தல்

3. ஐ. நா கொள்கைப்படியே மனித உரிமைகளுக்குப் போராடுதல், சிறுபான்மை இன மக்களின் பண்பாட்டுக் கலாசார நலன்களை வளர்த்தல், ... ஒத்துழைத்தல்

4. வாழும் நாடுகளில் தமிழ்க் கல்வி, தமிழ் மொழி, தமிழ் நாகரியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் ஆகிய ... உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் தமிழகம் – இந்தியாவிலிருந்து பெறுவது

5. மாநாடு அரசியல், மதம் எதிலும் சாராது ... நாட்டு அரசியலிலும் தலையிடாது உலகத் தமிழர்களை ஒருங்கிணைப்பாகச் செய்வது, பல இன மக்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்ப்பது ஆகியன இயக்கத்தின் நோக்கமாகும்.

இம் மாநாட்டில் உலகெங்கும் வாழ்கின்ற தமிழினம் பற்றிய வாழ்வியலும் புள்ளி விபரங்களும் கொண்ட மகத்தான வரலாற்றுக் கருவூலக் களஞ்சியம் ஒன்றும் சிறப்பாகப் படைக்கப்படுகிறது.

இத்துணை சீரும் சிறப்பும் வாய்ந்த உலகத் தமிழர்கள் ஒன்று கூடி வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கும் மாநாடு தான் கோலாலம்பூர் நகரில் நடக்க இருக்கிறது. ஆகவே

இம் மாநாடு சிறப்புற நடைபெற தங்களின் ஒத்துழைப்பும், பொருளுதவியும் வேண்டுகிறோம். பேராளராக பங்குபற்றிப் பாங்குறைக்க அன்புடன் அழைக்கிறோம்.



தொடர்புக்கு

110 Jalan Bamau Berkeley Garden
Klang Malaysia. TEL 3417906

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழமும் டெல்லியும்

ஒரே வாரத்தில் ராஜீவ் காந்தியின் அரசுக்குத் தமிழ்நாட்டில் மரியாதை அதிகரித்து விட்டது. இந்திய அளவில் மற்ற எதிர்க்கட்சிகள் ஒரு வாரமாக ராஜீவ் அரசை விமர்சிப்பதற்கு பதிலாக, ஒத்துழைக்க வேண்டிய நிலைமை வந்து விட்டது.

எரிகிற யாழ்ப்பாணத்துக்கு 25 டன் உணவுப் பொருளை இலங்கை அரசை மீறி ராஜீவ் அரசு அனுப்பியதே காரணம்.

இந்தப் பெருமிதத்தில் ராஜீவ் அரசும், தமிழர்களும் திளைக்கும் அதே வேளையில் - ஈழத்தமிழர்களின் இன்றைய நிராதரவான கதிக்குக் காரணமான பலரில் இந்திய அரசும் ஒன்று என்பதை மறந்துவிடக் கூடாது. அப்படி மறந்தால் சரித்திரத்தைப் புறக்கணித்ததாகிவிடும்.

ராஜீவ் காந்தி அரசின் வழவழாக் கொள்கையினால்தான் ஜெயவர்த்தனே அரசு தன் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு தமிழர்கள் மீது இறுதித் தாக்குதலை நடத்தும் நிலையே ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் முக்கால் மயானமாக மாறுகிறபோது அனுப்பிய நிவாரண உதவியை, ஆறு மாதங்களுக்கு முன்னால் இலங்கை அரசு யாழ்ப்பாணத்துக்கு பெட்ரோல் முதலிய பொருட்களை அனுப்பாமல் தடை செய்தபோதே, இந்தியா அனுப்பியிருக்கலாமே. அப்படி செய்திருந்தால் 'இறுதித் தாக்குதலே வந்திருக்க முடியாது.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் தொடர்ந்து ஏமாற்றிய ஜெயவர்த்தனே அரசை ஒரு நியாயமான சமரசத்துக்கு வந்தே தீர வேண்டிய கட்டாயத்தை இந்திய அரசு ஏற்படுத்தவே இல்லை.

தனி ஈழத்தை ஆதரிக்காவிட்டாலும், ஐக்கியமான இலங்கைத் தீவில் சம உரிமை உடைய சுயாட்சியை தமிழர்கள் பெறுவதற்குக்கூட இந்தியா கடந்த காலத்தில் உருப்படியான நடவடிக்கை எதையும் செய்யவில்லை.

உள்நாட்டு அரசியலில் தனக்கு (ஃபேர்ஃபாக்ஸ், அமிதாப், வி.பி. சிங், ஸ்வீடன் பணம், ராணுவ பேரம்) சிக்கல் வரும்போது, அதிலிருந்து கவனத்தைத் திருப்ப மட்டுமே ராஜீவ் ஈழத்தமிழர்கள் மீது அக்கறை காட்டுவது போதாது.

"தமிழர்களுக்கு சம உரிமை, சுயாட்சி முதலியவற்றை முறைப்படி தர நீங்கள் ஒப்புக்கொள்ளாத நிலையில் ஈழப்போராளிக் குழுக்களை ஈழநாட்டு அரசாங்கமாகக் கருதி நாங்கள் அங்கீகரிக்க வேண்டியவர்களாகிறோம். ராணுவத்தை வாபஸ் வாங்கி, தமிழர்களின் சுயாட்சி ஏற்படுத்த முன்வந்தால் இந்த அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவோம்" என்ற ரீதியில் ஓர் அறிவிப்பை இந்தியா செய்திருந்தால் கூட நிலைமை மோசமாகி ஈழத்தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொலையானதைத் தடுத்திருக்கலாம்.

இப்போதும் தாமதமாகிவிடவில்லை. அனைத்துப் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அமைப்பை உருவாக்கச் சொல்லி, அதற்கு அங்கீகாரம் அளிப்பதாக இந்திய அரசு அறிவிக்கலாம்.

அறிவிக்குமா?

அல்லது அடுத்த அரசியல் நெருக்கடி வரும்வரை ஈழத்தமிழரை சாகவிடுமா?

**அவன் மற்றவர்களை மன்னிக்கிறான்; ஆண்டவன் அவனை மன்னிக்கிறான். ...அரேபியா**

**இளங்கன்னிகள் திராட்சைப் பழங்கள்; வயோதிகப் பெண்கள் உலர்ந்த திராட்சைகள். ....ஜெர்மனி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறைவிடம் - தங்கும் நேரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.8.87 | நண்பகல் | முதல் | 29.8.87 | நண்பகல் | வரை | |
| 29.8.87 | " | " | 30.8.87 | " | " | 30.00 |
| 30.8.87 | " | " | 31.8.87 | " | " | 30.00 |
| 31.8.87 | " | " | 1.9.87 | " | " | 30.00 |
| | | | | | | $ 90.00 |

மாநாட்டுக்கு முதல் நாள் இடம் வேண்டுவோர் முன்னரே பணம் அனுப்பிப் படிவமூலம் இதை உறுதிப்படுத்திக் கொண்டுவிட வேண்டும். தனியறை வேண்டுவோருக்கான விதிமுறை இதிலடங்கவில்லை. விடுதியில் உணவு ஏற்பாடு எதும் இல்லை. விதிமுறைகளை மீறி, மாநாட்டுப் பேராளராகப் பதிவு செய்து கொள்ளாத எவருக்கும் உறைவிட வாய்ப்பு உருவாக்கித்தரவே முடியாது.

மாநாட்டுக் கட்டளைகளும், கருத்தரங்க விதிகளும் கட்டாயமாகவே செயல்படுத்தப்பெறும்.

மாநாட்டுக் கருத்தரங்க மண்டபத்தின் ஒரு பகுதியில் "உலகத் தமிழ்க்கருவூலக் கண்காட்சியும், உள்நாட்டு நூல் விற்பனையும் உண்டு. மூன்று நாளும் விடியோ தொலைக்காட்சி படம் எடுக்கப்பட உள்ளது. சிறப்புமலரும் வெளியிடப்பெறுகிறது.

நிதிப்படிவத்தின் வழியாக நன்கொடை திரட்டுவோர்க்கு வேண்டுகோள்.

கழகம் - மன்றம் போன்ற பொறுப்பாளர்களும், தொடர்புக் குழுவினராக நன்கொடை ஈட்டிவரும் பேராளர்கள் தத்தம் பகுதியில் திரட்டிய நன்கொடைகளைப் பட்டியலுடன் 20.8.87க்குள் கண்டிப்பாகவே அனுப்பிடுமாறு வேண்டுகிறோம். மாநாட்டுச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் இதுவே வேண்டுகோள்! கூடுதல் நன்கொடை திரட்டிய பேராளர்க்குச் சிறப்பு செய்யப்பெறும்.

மாநாட்டுக்கு வரும் அயலகத் தமிழறிஞர்களும், பன்னாட்டுப் பேராளர்களும்.

தமிழகத் தமிழறிஞர்களான பேராசிரியர்களும், புலவர்களும், பலநாட்டு ஆய்வறிஞர்களும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கச் சிறந்த சான்றோர்களும், பல்வேறு ஆய்வாளர்களும் இப்பன்னாட்டு மாநாட்டுக்காகவே வருகிறார்கள். சில பெருமக்கள் சிறப்பழைப்பாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.
அவர்கள் பேராசிரியர் க. அன்பழகன், மாவீரர் ப. நெடுமாறன், கலைத்துறை இயக்குநர் டி. இராஜேந்தர், திருக்குறளர் வி. முனிசாமி ஆகியோர். தமிழக உணவமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களையும் அழைத்துள்ளோம்.

இதர, மாநாட்டுக்கு உறுதியாக வருவோர் வருமாறு: மோரிசியஸ் பெரியார் மர். தங்கமுத்து, பாரிஸ் திரு ப. தேவநேமாறன், இலண்டன் அறிஞர் க. சிவசோதி, லிபியா ஆய்வறிஞர் இரா. வேங்கடகிருட்டிணன், டாக்டர் மு. அப்துல்கரீம், டர்பன் மு. அன்பன், கலிபோர்னியா (அமெரிக்கர்) சுவாமி விஞ்ஞானநந்தா, சேலம் மாநகரத் தலைவர் டாக்டர் கோ. சூடாமணி, ஈழம் வழக்கறிஞர் பொன் பூலோகசிங்கம், புலவர் நா. சிவபாதசுந்தரனார், சிங்கப்பூர் இர. ஜெயதேவனார், பிஜித்தீவு பாலகணபதி, புதுவை வீ. மதுரகவி, புலவர் திருக்குறள் பெருமாள், பாவலர் முல்லைவாணன், சேலம் சோலை இருசன், பாங்காக் அறிஞர் மலைக்காடர், சுவிட்சர்லாந்து மகேசமகேசன் ஆகியோர் உட்பட மேலும், பலர் வருகிறார்கள்.

மாநாடு தள்ளிவைக்கப்பட்டுள்ளதால் பலரின் வருகை உறுதிப்படுத்தப்பட்டு முடிவு விரைவில், இரு மாதத்திற்குள் தெரிய வரும். பின்னர் இது அறிவிக்கப்பெறும்.

மலேசியாவில் இருநூறுக்கு மேற்பட்டோர் வருகைதருவர் என நம்புகிறோம். மிகப்பலர் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

உங்கள் பேராதரவும், ஒத்துழைப்புமே மாநாட்டைச் சீரோடு சிறப்பு சேர்க்கும் என நம்புகிறோம். உறுதியான பற்றுறுதி வேண்டும்.

நன்றி. வணக்கம்.

கிள்ளான்.
6.6.87

இக்கண்,
இர. ந. வீரப்பன் (கையொப்பம்)
............
இர. ந. வீரப்பன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*உங்கள் இல்லத்திற்கு தேவையான
உள்ளத்திற்கு விருப்பமான

*மளிகைச்சாமான்கள்

*இரும்பு, தட்டு முட்டு பொருட்கள்

*வர்ணங்களின் பல வகைகள்

*கண்ணாடி ஜன்னல்கள்

*அன்பளிப்பு, அழகு சாதனங்கள்

*சுத்தம் செய்யும் மின் கருவிகள்

*சிற்றுண்டி உணவுகள்

*தமிழ் இதழ்கள்

ஆகியவற்றை வாங்க

**எமது கடையே சிறப்புடையது**

**கடையோ பெரிது * விலையோ குறைவு**

# PARIS'S CEYLAN PIONEERS

**COULEURS-BAZAR-MÉNAGE**

14 RUE DE GONCOURT

**75011 PARIS - TEL: 43.57.51.70**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை இந்தியா மோதல் ஏன்

வளாமுக நாடுகளின் உறவுகள் கெட்டால் அதன் மூலமாக அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்காக ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு உதவிடும் நேச உணர்வும் தகர்க்கப்படும்.

பொருளாதார தடையை உருவாக்கிவிட்டால் அமெரிக்க ஏகாதிபத்தியம் வளர்முக நாடுகளை கொள்ளையடிக்க முடியும் என்பதே அமெரிக்க திட்டமாகும்.

அமெரிக்க அரசின் சதி திட்டத்தை இலங்கை புரிந்து கொள்ளாததன் காரணத்தால் தான் ஈழத்தமிழர் பிரச்சனை இவ்வளவு பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.

திரிகோணமலையில் ராணுவத்தளம் அமைக்க அமெரிக்கா நினைப்பதும் இதன் தொடர்புகளால்தான். பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் திரும்பி விட்ட நிலையில் அமெரிக்க ராணுவத் தளங்களை 1990 ஆம் ஆண்டிற்குள் அப்புறப்படுத்த வேண்டிய நிலையில் அமெரிக்கா உள்ளது.

இந்நிலையில் இந்திய கடலில் டீகோகார்சியா முதல் ஜப்பான் வரை வில் மாதிரி இராணுவக் கேந்திரங்களை அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அந்த வில் அமைப்பில் நாண் மாதிரியான இடம் திரிகோணமலை துறைமுகம்! இந்திய கடலிலேயே மிகப் 'பெரிய அணு ஆயுதகிடங்காகவும் அதிரடிப் படையின் (Rapid Deployment Force) தளமாக உள்ள டீகோகார்சியா ராணுவத்தளத்திற்கு மிக அருகில் களியாட்டம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கொண்ட இலங்கையை அடைய இந்தியா தடைக்கல்லாக இருக்கக்கூடாது எனவே இலங்கை, இந்திய

இலங்கை விஷயத்தில் அமெரிக்கா மிக அக்கறை எடுத்துக் கொள்ள வலுவான காரணம் உண்டு.

அமெரிக்காவின் கூட்டாளியான பாகிஸ்தானுக்கு உதவும் வகையில் இந்தியாவின் தெற்கு எல்லையில் இந்தியாவிற்கு கடுமையான பிரச்சனையை உருவாக்க வேண்டும்; என அமெரிக்கா விரும்புகின்றது.

மேற்கில் பாகிஸ்தான், வடகிழக்கில் சீனம் கிழக்கில் பங்களாதேஷ், தெற்கே இலங்கை என்று இந்தியாவின் நான்கு திசைகளிலும் பகைமை மூட்டி ஒருவிதப் 'போர் வளையத்திற்குள்' இந்தியாவை நெருக்கி தனக்கு 'அடிபணிய' வைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது!

கூட்டுச் சேரா நாடுகள் இயக்கத்தின் 'Non-aligned-Movement-NAM) உறுப்பு நாடுகளிடையே பிணக்குகளையும் மோதல்களையும் உருவாக்குவது என்ற சதித் திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கையை இந்தியாவிற்கு எதிராக அமெரிக்கா தூண்டி விடுகிறது.

இலங்கை-இந்தியா மோதல் மூலமாக உலக அளவில் இந்தியாவின் பெருமையை குலைக்க அமெரிக்கா நினைக்கிறது.

ஏகாதிபத்தியத்தை நாள்தோறும் எதிர்த்து வரும் இந்தியாவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது.

சர்வதேச அரசியல் சக்தியாக வளர்ந்துள்ள கூட்டுச் சேரா நாடுகளின் கூட்டு வலிமையை குறைக்கவே இலங்கையைத் தூண்டி பிளவை உருவாக்குகிறது அமெரிக்கா!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சில மாதங்களுக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், தாமரைக் கனியையும் நெகமம் கந்தசாமியையும் ஆளும் அ.தி.மு.க. கட்சியிலிருந்து எம்.ஜி.ஆர். நீக்கினார். கட்சிக்கு விரோதமாக செயல்பட்டார்கள் என்று நீக்கத்திற்கு காரணம் சொல்லப்பட்டது.

இப்பொழுது மீண்டும் அவர்களை கட்சியில் (நேரிலும், கடிதம் மூலமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லி) சேர்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர். முதலில் தாமரைக்கனியை கட்சியில் சேர்த்துக்கொண்டதாகஅறிவிப்பு வந்தது. "இந்தச் சேர்ப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். இராமச்சந்திரனை மட்டம் தட்டுவதற்கே!" என்றே அரசியல் நோக்கர்கள் அப்போது அடித்துச் சொன்னார்கள்.

மேலும், மந்திரி பதவி நாடார் சமூகத்திற்கு இல்லை என்பதால் மனம் நொந்து போயிருக்கிற அந்த சமூகத்தின் தலைமேல் பனிக்கட்டி வைத்து குளிர்ச்சி ஏற்படுத்தவே தாமரைக்கனி அ.தி.மு.க. வில் திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இப்படி ஒரு கருத்தும் நிலவியது.

தற்பொழுது நெகமம் கந்தசாமியும் ஆளுங்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டபிறகு இந்த வாதம் படுத்துவிட்டது! இவர்கள் இருவரின் 'மறு சேர்க்கை'க்கான உண்மைக் காரணம் வெளியாகி இருக்கிறது! அது...

எனவே அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவே இந்தச் சேர்ப்பு என்பது தெளிவாகிவிட்டது.

தமிழக அரசின் உள்துறை செயலாளர் டி. வி. வெங்கட்ராமன் ஜப்பான் நாட்டுக்கு சென்று இருக்கிறார். புறப்படுமவரை அவரது பயணம் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. டாக்டர் கானுவைச் சந்தித்து முதல்வரின் உடல் நிலை பற்றிய விவரங்களை தெரிவித்து அங்கிருந்து புருக்ளின் மருத்துவமனைக்குச் செல்லவும் ஏற்பாடாகிவருகிறது. இந்தச் சுற்றுப் பயணத்தின் அவசியம் வாரம் ஒரு முறை மீண்டும் முதல்வருக்கு டயலிசிஸ் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதுதான் என்று கூறப்படுகிறது.



தொழில் அமைச்சர் ராஜாராம் இப்போது வெளிநாட்டுக் காரில் (பென்ஸ்) பவனி வருகிறார். இது சக அமைச்சர்களை மட்டுமல்ல, ஆளும் கட்சியிலேயே அவர் மீது கசப்பான பார்வையை ஏற்படுத்தி இருக்கிறது. பதவி பறிபோனாலும் கவலை இல்லை. இருக்கிற வரை அனுபவித்து விட்டுப் போகலாம் என்ற முடிவுக்கு ராஜாராம் வந்துவிட்டதாகத் தகவல். மேலும் பீட்டர்ஸ் சாலையில் உள்ள ஒரு வழக்கறிஞரின் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவதுதான் இந்த மாற்றத்துக்கு எல்லாம் காரணம் என்றும் பேசிக்கொள்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ✱ ஹரியானாவின் கலக்கல் ✱

✱ ஹரியானா மாநில சட்டசபைத் தேர்தலின் முடிவு இந்திய அரசியல் அவதானிகளை ஒரு கலக்கு கலக்கி விட்டது. எதிர்பாராத முடிவுதான் காரணம்.

✱ 101 வருட காங்கிரஸ் பெற்ற மாபெரும் சட்டமன்ற படுதோல்விகளில் இதுவும் ஒன்று.

✱ "கட்சித் தலைவர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்" என்று இந்துஸ்தான் டைம்ஸ் கூறியது. அவர்கள் இவ்வளவு மோசமான விளைவை எதிர்பார்க்கவில்லை.

✱ மொத்தமுள்ள 90 இடங்களில் 61 இடங்கள் பெற்று அசைக்க முடியாத பெரும்பான்மை பெற்ற கட்சி இம்முறை 10 இடம் மட்டும் என்றால் தோல்வியின் கடுமையை எப்படி வருணிப்பது?

✱ வெற்றி பெற்ற லோக் தளம், பாரதீய ஜனதாக் கட்சிகள் பெற்றிருந்தது. இம்முறையோ 70-க்கும் மேற்பட்ட இடங்கள்.

✱ ஹரியானாவின் காங்கிரஸ் முதன்மந்திரி பன்சிலாலும் அவருடைய 16 மந்திரிகளில் 15 பேரும் மிகவும் நன்றாக தோல்வியைக் கட்டித் தழுவினார்கள்.

✱ இரு ஆண்டுகளில் நடைபெற்ற 7 மாநில தேர்தல்களில் இது ஆறாவது தோல்வி. வெற்றி பெற்ற ஒரு மாநில வெற்றியும் கூட்டணி மூலம் பெற்ற வெற்றிதான். ஆம் காஷ்மீர் மாநிலத்தின் பரூக் அப்துல்லாவின் தேசீயக் கட்சி கூட்டணி இல்லையென்றால் காங்கிரஸ் வெற்றி பெற முடியாது என்பது இந்திய அரசியல் இலக்கணம் கற்ற சிறு மாணவனுக்கும் புரியும்.

✱ தென்னிந்திய மாநிலங்களில் காங்கிரஸ் தோற்றது கூட மாபெரும் அதிர்ச்சி அல்ல.

www.tamilarangam.net

ஆச்சரியமல்ல.

*மேற்கு வங்கத்தில் தோற்றது ஆச்சரியமல்ல. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே "போய் வாங்க" என்று சொன்ன மாநிலம் தான் வங்கம்.

*ஆனால் ஹிந்தி மொழி ஆதிக்கம் உள்ள வடமாநிலத்தின் தோல்வி இப்போது ஒரு கேள்வியையே எழுப்பியுள்ளது.

*என்ன கேள்வி?

1989 பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி அமையுமா? என்பதுதான்.

*மற்ற மாநிலங்களில் அமைந்த தோல்விகளை ஓரளவு ஜீரணிக்க முடிந்தது. ஆனால் இத் தோல்வியின் ஜீரணம் கடினமாக இருக்கும்.

*"மற்ற மாநிலங்களும் இம்முறையையே ஏற்கக்கூடும்" என அவதானிகள் அனுமானிக்கின்றனர்.

நாட்டின் தலைவரான அவர் மாபெரும் ஜனநாயகத்தில் தானும் தனது கட்சியும் பெற்ற வெற்றியைக் கேட்டு இன்ப அதிர்ச்சியால் மருத்துவமனைக்கு அனுமதிக்கப் பட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

*பிரதமர் ராஜீவ் காந்தி பாடங்களை விரைவில் படிப்பது அவருக்கு நல்லது.

பிராமணர் சங்க மாநாடு

ஜூன் 2

தமிழ்நாடு பிராமணர்கள் சங்க மாநாடு தஞ்சையில் தொடங்கியது. அர்ச்சகர்கள், புரோகிதர்கள், சமையல் வேலை செய்பவர்கள் முதலியவர்களைப் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கவேண்டும் என்றும், பிற்பட்ட வகுப்பினரைப் பொருளாதார ரீதியில் வகைப்படுத்த வேண்டும் என்றும் இந்த மாநாடு மத்திய அரசையும், மாநில அரசையும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டது.

---

பிளஸ்-2வில் சாதனை

ஜூன் 4

தமிழகத்தில் நடைபெற்ற பிளஸ்-2 தேர்வில் சென்னை ராயப்பேட்டையிலுள்ள ஆதர்ஷ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த செல்வகுமார் என்ற மாணவர் விலங்கியல் 200'க்கு 198 மதிப்பெண்களும், தாவரவியலில் 200'க்கு 196 மதிப்பெண்களும், ரசாயனத்தில் 200'க்கு 200 மதிப்பெண்களும் பெற்று மாநிலத்திலேயே முதலாவதாக வந்துள்ளார். இவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக உள்ள டாக்டர் அமிர்தராஜனின் மகன். சென்னையைச் சேர்ந்த மாணவி எஸ். உஷா பொருளாதாரத்தில் 200'க்கு 198 மதிப்பெண் [illegible], [illegible]யலில் 200'க்கும் 200 மதிப்பெண்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்மானித்து விட்டார்! அம்மாதிரியான பொதுவான நபரைத் தேடும் போதுதான் ஜனாதிபதி ஜெயில்சிங் அவர் கண்களில் பட்டிருக்கிறார்!

ஜெயில்சிங்கிற்கு எப்போதும் பஞ்சாப் முதல்வர் பதவிமீது ஒரு கண் உண்டு! 1980 பாராளுமன்றத் தேர்தல் முடிந்தபோதே பிரதமர் இந்திராவிடம் தனக்கு மத்திய உள்துறையமைச்சர் பதவியைக் காட்டிலும் பஞ்சாப் முதல்வர் பதவிதான் பிடித்தமானது என்று கூறியிருக்கிறார்! ஆனால் அப்போது தர்பாராசிங் குறுக்கே புகுந்து ஜெயில்சிங்கின் ஆசையை இந்திரா நிறைவேற்றாமல் பார்த்துக் கொண்டார். அப்போது கிட்டாத வாய்ப்பை இப்போது ஜெயில்சிங்கிற்கு ஏற்படுத்தித் தருகிறார் ராஜீவ்!

இந்தியாவின் முதல் மனிதராக இருந்து விட்டு ஒரு சிறிய மாநிலத்தின் முதல்வராக எப்படி இருப்பது என்று ராஜீவிடமே கேட்டிருக்கிறார் ஜெயில் சிங்! அதற்கு ராஜீவ், ராஜாஜியை உதாரணம் காட்டியிருக்கிறார்! கவர்னர் ஜெனரலாக இருந்துவிட்டு தமிழகத்தின் முதல்வராக ராஜாஜி செயல்பட்டதை ஜெயில்சிங்கிடம் மேற்கோள் காட்டியிருக்கிறார்!

மேலும் ஜெயில்சிங்கின் மகளுக்கு மத்திய அமைச்சர் அவையில் இடமளிக்கவும் ராஜீவ் ஒப்புக்கொண்டிருக்கிறார்! இதன் மூலம் ஜெயில்சிங் குடும்பத்திற்கும் தகுந்த பாதுகாப்பைத் தர முடியும் என்று ராஜீவ் சொல்லியிருக்கிறார்!

ஒரு வழியாக ஜெயில்சிங்கும் இதற்கு சம்மதித்து விட்டதாகவே தெரிகிறது! பஞ்சாப் ஒப்பந்தத்தைக் காப்பாற்ற வேண்டி ஜெயில்சிங்கும் ராஜீவும் தங்களுக்குள் இந்த பதவி ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

தேவிலால்



www.tamilarangam.net

# ஜெயில்சிங்

## பஞ்சாப் முதல்வராகிறார்!

ராஜீவ் ஒரு வழியாக ஆர்.வியை ஜனாதிபதியாக்கி விட்டார்! ஜெயில் சிங்கும் மூட்டை முடிச்சுகளுடனும் 'மொகலாயத் தோட்டத்தை' விட்டுக் கிளம்பத் தயாராகி விட்டார்! ஆனால் ஜெயில்சிங்கின் வருங்கால நடவடிக்கைகள் குறித்து ராஜீவ் இன்னும் ஒருவித அச்சத்தையே கொண்டிருக்கிறார் என்பது அவரது நடவடிக்கைகளில் இருந்து தெரியவருகிறது! புலியின் வாலைப் பிடித்துக் கொண்டிருப்பவன் எந்த நிலையில் இருப்பானோ அந்த நிலையில் தான் ராஜீவ் - ஜெயில்சிங்கிடம் உறவு கொண்டிருக்கிறார்!

பிரதமர் மீது முழு வெறுப்புடன் பதவி விலகும் ஜெயில்சிங் நேராக பயங்கரவாதிகளின் கையில் சிக்கிவிடக் கூடும் என்ற பயம் வெகுநாட்களாகவே ராஜீவுக்கு உண்டு! மேலும் ஜெயில்சிங்கை எதிர்க்கட்சிகளின் பிடியில் சிக்காமல் தடுக்க எல்லாவித முயற்சிகளையும் செய்து வருகிறார் ராஜீவ்!

எல்லாவற்றிற்கும் மேலாக -

பஞ்சாப் பிரச்சனை இன்று மிக பயங்கரமான நிலையை அடைந்து விட்டது! பஞ்சாப் மக்களின் ஓட்டுகளை எதிர்பார்த்து லோங்கோவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் பிரதமர்! இதனால் பஞ்சாப் மக்கள் திருப்தியடையவில்லை! மாறாக அரியானாவின் கோபத்தை சம்பாதித்ததுதான் மிச்சம்! அரியானா மக்களின் ஆதரவையாவது பெறலாம் என்று பர்னாலாவின் ஆட்சியைக் கலைத்தார்! அதாலும் பயனில்லை! அரியானா மக்களோ இ.காங்கிரஸைத் தூக்கி எறிந்து விட்டனர்! அரியானா முதல்வர் தேவிலாலோ ராஜீவ் லோங்கோவால் ஒப்பந்தத்தை உடைத்து அறிவித்துவிட்டார்! பஞ்சாப், அரியானா இரண்டுமே கைநழுவிப் போய் விட்டதால், பஞ்சாப் ஒப்பந்தத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகப் போய்விட்டது! பஞ்சாப், அரியானா மக்களின் கவனம் காங்கிரஸ் பக்கம் திரும்ப, ராஜீவுக்கு இன்று ஜெயிங்சிங்கின் உதவி தேவைப்படுகிறது!

கடந்த வாரம் -

ராஷ்டிரபதிபவனுக்கு மிக ரகசியமான விஜயம் ஒன்றை மேற்கொண்டார் ராஜீவ்! ஆனால் இதைப் பத்திரிகைகள் பெரிது படுத்தி வெளியிட்டு விட்டதால், 'சம்பிரதாயமுறையில் தான் ஜெயில்சிங்கை சந்தித்ததாக பிரதமர் கூறிவிட்டார்! பதவியில் இருந்த போது ஜெயில்சிங்கிற்குத் தராத சம்பிரதாய மரியாதைகளை அவர் பதவி விலகிச் செல்லும்போது வலிந்து சென்று ராஜீவ் ஏன் தர வேண்டும்?

நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேல் ஜெயில்சிங்குடன் தங்கி அவரை சமாதானப்படுத்தும் வழிகளில் ஈடுபட்டார் ராஜீவ்! கடைசியாக தனது கடைசி துருப்புச் சீட்டை முன் வைத்தார்! அதுதான் பஞ்சாப் முதல்வர் பதவி!

தற்போது பஞ்சாப் ஆட்சி தற்காலிகமாகதான் பதவி விலக்கப்பட்டிருக்கிறது! மீண்டும் எப்போது வேண்டுமானாலும் பதவி விலக்கப்பட்ட பர்னாலாவிடம் ஆட்சியை அளிக்கலாம்!

ஆனால்

மீண்டும் பர்னாலாவிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்க ராஜீவ் தயாராக இல்லை! பாதல் கோஷ்டியையும் தேவிலால் ஆசையும் சமாளிக்க பர்னாலாவினால் முடியாது! எல்லா அதிருப்தி பிரிவினருக்கும், பர்னாலா, பாதல் மற்றும் தேவிலாலுக்கும் பொது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னுடைய அறிவிப்பையும் கொள்கை பரப்பு செயலாளர் அறிவிப்பையும் தவிர வேறு யாருடைய அறிவிப்பையும் அண்ணா பத்திரிகையில் வெளியிடக் கூடாது என்று [illegible] அறிவிப்பு பற்றி [illegible] இரண்டு ஆவது கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற விதியின் கீழ் கொண்டு வந்தார்கள்.

[illegible] அவர்கள் அறியாதவாறு அதைக் கேட்டார். அவர்கள் இருவரும் பேசிய விவரம் வருமாறு:

அண்ணன் தானே (கணியந்து) தனது சுற்றுப் பயணத்தைப் பற்றி அண்ணாவில் அறிவிப்புக் கொடுத்தார் என்று அந்த இளம் சட்டமன்ற உறுப்பினர் கேட்க அறுபடைத் தொகுதி எம்.எல்.ஏ. உடனே அதெல்லாம் அப்படி இருக்காது.

அண்ணன் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம். தலைவர் ஏன் இப்படி அறிவிப்புக் கொடுக்க வேண்டும்?

அண்ணா பத்திரிகை ஆசிரியரை அழைத்து என் அறிவிப்பையும் கொள்கைபரப்புச் செயலாளர் அறிவிப்பும் தவிர வேறு யார் அறிவிப்பும் அண்ணாவில் வரக்கூடாது எனக் கூறியிருந்தாலே போதுமே!

இதற்கோர் அறிவிப்பா; நல்ல கட்சிடா! கூத்தும் கொடுமையும் என்று கூறிவருகின்றனர்.

ஜெயவர்த்தனா ஆவேசம்

ஜூன்

இலங்கையின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காக்கத் தானு தனது அமைச்சர்களும் தனது கட் எம்.பி.க்களும் உயிர்த் தியாகம் செய்ய விரும்புதாக ஆவேசத்துடன் கூறினா ஜெயவர்த்தனா. இலங்கையைப் பிள படுத்தி, தமிழ் ஈழம் அமைக் வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள் என்றும், தனது உயிர் போனாலும் இல கையைத் துண்டு போடத் தாம் விட போவதில்லை என்றும் அவ கூறியுள்ளார்.

---

மாமியார் கைது

ஜூன் 1

வரதட்சணைக் கொடுமை காரணமாகச் சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதி யைச் சேர்ந்த மங்கையர்க்கரசி (21 என்பவர் தீக்குளித்தார். அவர் அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து அவரது மாமியார் சுந்தரம்மாளைப் போலீசா கைது செய்துள்ளனர் திருமணத்தின்போது தருவதாகச் சொன்ன சீர் வரிசைகளை வாங்கி வரும் படி சுந்தரம்மாள் கொடுமைப்படுத்திய தாகக் கூறப்படுகிறது.


10.7.1987 அன்று எமது ஸ்தாபனம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மளிகைப் பொருட்கள், காஸ்மடிக் வகைகள், ஒப்பனை அன்பளிப்புப் பொருட்கள் போன்ற பல வகைத் தேவைகளை குறைந்த விலையில் நிறைவாகப் பெற அணுகுவீர்.

**AKILA SHOPPING CENTRE**

**MARCADET POISSONIE-**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**CABRI** MỘT CỬA HÀNG RẤT TÍN NHIỆM TỪ LÂU VỀ THỊT BÒ, GÀ, DÊ VÀ ĐỒ LÒNG V.V. HALAL VỚI GÍA RẤT RẺ QÚY VỊ CÓ THỂ TIN CẬY ĐƯỢC.

NẾU QÚY VỊ MUỐN MUA SỈ, BẠN NÊN ĐẶT TRƯỚC VÀO NGÀY THỨ BA.

SAU ĐÂY LÀ ĐỊA CHỈ:

# SOCIETE CABRI

உங்களுக்குத் தேவையான ஹலாலான ஆடு, மாடு, கோழி, வான்கோழி இறைச்சி, குடல், ஈரல் போன்றவைகள் சுத்தமான முறையில், குறைந்த விலையில் கிடைக்கும் இடம்.

சில்லறை, மற்றும் மொத்த வியாபாரமும் உண்டு.

முகவரி:

**195, Rue du Faubourg Saint Denis, 75010 PARIS**
(Metro: GARE DU NORD)

TEL (1)42 39 27 11

சோம்பேறி சோதிடனாகிறான். ...அசோபா

கண்ணீர் …

www.tamilarangam.net


# இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

பண்டிகைகள், திருமணம்.
விருந்து வைபவங்களுக்கான அழகிய பட்டுச் சேலைகள்,
ஜார்ஜெட், சிப்பான், சைனாசில்க், கம்ப்யூட்டர்
சுவீட்பியூட்டி குயின், பூனம், ரேவதி மற்றும் பலவகையான
சேலைத் தினுசுகளனைத்தும் விற்பனையிலிருக்கின்றன! வருகைதாருங்கள்!
மிகப்புதிய டிசைன்களில் அனைத்து ஜவுளிகளையும் குறைந்த விலையில் வாங்கிட
மிகச்சிறந்த இடம் என நீங்களே போற்றுவீர்கள்!

## BENGAL SAREE CENTRE

197, rue du Faubourg Saint-Denis
75010 PARIS Téléph.42 06 92 66
Métro : La Chapelle et Gare du Nord

R.C.S. Paris 84 B 12391

வியாபாரிகளுக்கு தனிச்சலுகை உண்டு!

www.tamilarangam.net


## எங்கள் நல்வாழ்த்துக்கள்!

**மலிவு விலையில் தரமான பொருள்கள்**

- சகலவிதமான மளிகை சாமான்கள்
- புதிய டிசைன்களில் ஜப்பான், அமெரிக்கன்,
- இந்திய புடவைகள்
- புதன்கிழமை தோறும் பச்சை காய்கறிகள்,

☆ வெண்டைக்காய், தேங்காய்,
☆ பச்சை மிளகாய், இஞ்சி,
☆ ஆகியவற்றிற்குத் தாங்கள் வருகை தரும்படி
☆ அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். ☆

வியாபாரிகளுக்கு தாராளச் சலுகை

# JAWEED
# INTERNATIONAL
# BAZAAR

201, rue du Faubourg Saint-Denis
75010 PARIS Téléph. 42 09 43 70
Métro : La Chapelle et Gare du Nord

## வருகைதாருங்கள்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோழன் உங்கள் தோழன்

# CHOLA VOYAGES
# சோழா வையாஜ்

குறைந்த விலையில்
குறிப்பிட்ட நேரத்தில்
சென்னை - பாம்பே - டெல்லி
இன்னும் வேண்டிய இடம்
சென்றுவர . . . . . . . .
எங்களை அணுகுங்கள்.
டிக்கட்களை
உடன் செய்துதருகிறோம்.

இருவர், அதற்கு மேற்பட்ட
குடும்ப டிக்கட்களுக்கு
(COUPLE et GROUPE)
விலையை குறைத்துத்
தருகிறோம். . . . . . . .
நேரில் வாருங்கள்.
கலந்துபேசி
ஆவன செய்கிறோம்.

MR. RODRIGUES இந்த
நிறுவனத்தின் டைரக்டர்.
பலவருடம் AIR INDIAவில் பணிசெய்து
அனுபவம் பெற்றவர். தமிழ் - பிரெஞ்சு
ஆங்கிலம் பேசுவார்

**CHOLA VOYAGES**
MAURICE RODRIGUES
Directeur
190, rue du Faubourg Saint-Denis
75010 PARIS Téléph. 42 02 55 64
Métro La Chapelle et Gare du Nord

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்